இதழ் 189

# மண்

ஜேர்மனி / 2018
வைகாசி - ஆனி
May - June



சுவாமி விபுலாநந்த அடிகள்
27.03.1892 - 19.07.1947





உலகத் தொழிலாளர் தினம் மே 1





# உள்ளே


- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி



முகவரி: V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

தொலைபேசி: 0203/8073898

தொலைநகல்: 0203/8073898

மின்னஞ்சல்: v.sivarajah@arcor.de



வங்கிவிபரம்: Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

# எங்கள் கருத்து...



**காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் வெளியாகியுள்ள தகவல்!**

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டுள்ளவர்களில் 25 முதல் 40 வயதுக்கு இடைப்பட்டவர்களே அதிகளவில் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. நல்லிணக்க ஒருங்கிணைப்பு பொறிமுறைக்கான செயலகம் தமது அதிகாரபூர்வ டுவிட்டர் தளத்தில் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

தாய், தந்தை மற்றும் குடும்பத் தலைவர்கள் என 25 முதல் 40 வயதுக்கு இடைப்பட்ட 40 வீதமானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.அத்துடன், 18 முதல் 24 வயதுக்கு இடைப்பட்ட 38 வீதமானோரும், 17 வயதுக்கு உட்பட்ட 9.8 வீதமானோரும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தமது அன்புக்குரியவர்கள் நிலைமை என்ன என்று தெரியாமல் துன்பத்தில் ஆழ்ந்துள்ளனர்

அந்த செயலகம் தெரிவித்துள்ளது.இதேநேரம், இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் 100 இற்கும் குறைவான மக்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என நல்லிணக்க ஒருங்கிணைப்பு பொறிமுறைக்கான செயலகம் தகவல் வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் 2 ஆயிரத்துக்கும் அதிகமானோரும், திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் ஆயிரம் முதல் 2 ஆயிரத்துக்கு இடைப்பட்டோரும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சி, முல்லைத்தீவு, கண்டி, அநுராதபுரம் மற்றும் குருநாகல் முதலான மாவட்டங்களில் 501 முதல் ஆயிரம் பேரிற்கு இடைப்பட்டோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

மன்னார், வவுனியா, பதுளை, கேகாலை, கொழும்பு, களுத்துறை, பொலனறுவை, காலி, மாத்தறை மற்றும் கம்பஹா முதலான மாவட்டங்களில் 251 முதல் 500 க்கு இடைப்பட்டோரும்,மாத்தளை, நுவரெலியா, இரத்தினபுரி, மொனராகலை, புத்தளம் மற்றும் ஹம்பாந்தோட்டை முதலான மாவட்டங்களில் 100 இற்கும் 250 இற்கும் இடைப்பட்டோரும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என நல்லிணக்க ஒருங்கிணைப்பு பொறிமுறைக்கான செயலகம் தெரிவித்துள்ளது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது இலங்கையில் இதுவரை காணாமல் போனோர் எண்ணிக்கை பல ஆயிரம்பேராவர். வடபகுதியல் காணாமல்போன உறவுகளைத் தேடி அலைந்து சாத்வீகப் போராட்டம் ஆரம்பித்து ஒருவருடம் தாண்டியும் எந்தப் பலனும் கிட்டவில்லை. இந்த நல்லிணக்க அரசும் தமிழ்த் தலைமைகளும் வாய்மூடி மௌனிகளாகிவிட்டனர். இந்த நிலையில் காணாமல்போனோரைக் கண்டுபிடித்து மக்களின் கண்ணீரை யார்தான் துடைப்பார்கள்?..

பாராளுமன்றக் கதிரைகளுக்கும் ஏனைய சபைகளின் கதிரைகளுக்கும் சண்டைபிடிக்கும் மூத்த தமிழ்க்குடிகளே!..எல்லோரும் அனைத்து அரசியல் கருத்துவேறுபாடுகளையும் விட்டு ஒருகணம் சிந்தியுங்கள். ஒன்றுபட்ட சிந்தனை, போராட்டம், அரசுமீதான அழுத்தம் எனத்தொடர்ந்தால்தான் இதற்கான பதில் கிடைக்கும். இல்லையேல் மீண்டும்...மீண்டும் மக்களின் வாழ்வு விடிவில்லா இருண்ட வாழ்வுக்குத்தான் இட்டுச்செல்லும் என்பதைப் புரிந்துகொள்வோமாக!..

-ஆசிரியர்-

# ஆத்திசூடி விளக்கம்!...




## நெல் பயிர் விளை:-

நீ என்ன தொழில் செய்கிறாய்? என்று யாரையாவது கேட்டு, அவர் பயிர்த்தொழில் செய்கிறேன், என்று கூறுவாரேயானால், நாகரிக நகரவாசியான உனக்கு இது இளக்காராமாக இருக்கும். ஆனால் நீ வெள்ளைச் சட்டையும், விதம் விதமான உணவும், வாகன சவாரியும், கேளிக்கையுமாக வாழ, கிராமத்தில் குடியானவன் உழவுத்தொழில் செய்தால்தான் முடியும். " உழதுண்டு வாழ்வாரே வாழ்வார் " என்கிறார் திருவள்ளுவர். மற்றவர்களெல்லாம் அவரைத் தொழதபடி அவர் பின் செல்லவேண்டியவர் என்கிறார் அவர். உழவுத்தொழிலே மிகச்சிறந்த தொழில். மற்றத் தொழில் செய்பவர்களும் உழவரிடம் நெல்லை வேண்டி உண்டு வாழ்கிறார்கள். அதனால் உழவுத்தொழிலை நீ இழிவானதாகக் கருதக்கூடாது. நல்லமுறையில் உரம் இட்டு நெற்பயிரை மிகுதியாக விளையச் செய்ய வேண்டும்.

## நேர்பட ஒழுகு:-

ஒரு குறிப்பிட்ட இடத்துக்குப் போக நேரான நெடுஞ்சாலை ஒன்று உண்டு. எல்லோரும் அதன் வழியேதான் செல்வார்கள்.ஆனால் அந்த இடத்துக்குப் போக ஒரு குறுகலான குறுக்குப் பாதையும் இருக்கிறது. அது முள்ளும் கல்லும் நிறைந்தபாதை. ஆனால் தூரம் குறைவு. செம்மையான பாதையில் செல்லாமல் கல்லும் முள்ளும் மேடும் பள்ளமுமான குறுக்குப் பாதையில் போய்க் கால் நோக விரும்பமாட்டாயல்லவா?.. இதே போலத்தான் வாழ்க்கைப் பாதையில் சிலர். கோணல் வழியில் சென்று தாழ்வு அடைவார்கள். நல்லொழுக்கம் உள்ளவர் என்றும் செவ்வையான பாதையில் நடந்து உயர்வை அடைவர் அதேபோல நீயும் ஒழுக்கம் தவறாமல் செவ்வையான வழியில் நடக்க வேண்டும்.

# கொன்றைவேந்தன்... (தொடர்ச்சி)

73.மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது

மீகாமம் என்பது மாலுமி இல்லாத மரக்கலம். அதாவது தோணி என்று சொல்லப்படும். அதேபோல் தலைவன் இல்லாத நாடும், தலைவன் இல்லாத குடும்பமும் செவ்வை பெறாது.

74.முற்பகல் செய்யும் பிற்பகல் விளையும்

வாழ்வின் முற்பகுதியில் தீங்கு செய்தால் பிற்பகல் விளையும். அதாவது பிற்காலத்தில் அதே தீங்கு நமக்கு உண்டாகும். ஆகவே பிறருக்குத் தீங்கு செய்யாமல் வாழவேண்டும்.

75.மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்

மூத்தோர் அறிவும் அனுபவமும் முதிர்ந்தவர்கள். ஆகவே அவர்கள் கூறும் அறிவுரைகள் என்றும் பயன்தரும். கல்விலு அறிவு, அனுபவம் என மூத்தோர் கூறும் சொற்கள் தேவாமிர்தம் போன்றவையாகும்.

76.மெத்தையில் படுத்தல் நித்திரைக்கு அழகு

உறக்கத்துக்கு அழகு எது என்றால் இலவம் பஞ்சினால் செய்த மெத்தையிலே படுத்து உறங்குதலே. தூக்கத்திற்கு அழகு பஞ்சு மெத்தையில் படுத்துறங்குவதுதான் நல்லது.

77.மேழிச் செல்வம் கோழை படாது

மேழி என்பது கலப்பையாகும். இந்தக் கலப்பையை எடுத்து உழது பயிர் செய்து பெற்ற செல்வம் ஒருபோதும் குறையாது. இதனால் கிடைக்கும் செய்வம் சிறுமை அடையாது.

78.மை விழியார் தம் மனை அகன்று ஒழுகு
மை தீட்டிக் கண்களை உருட்டி விழிக்கும் விலைமாதர்களின் மனை அருகில் போகாது தொலைவிலேயே இருந்துகொள். அவர்களுக்குக் கிட்டக்கூடச் சென்றுவிடாதே.

# குட்டி கதை......

ஒரு ஊரில் ஒரு செல்வந்தர் இருந்தார். ஒருநாள் ஏதோ வேலையாக நடந்துசென்றார்.அப்போதுசெருப்பு பிஞ்சுபோச்சு.. அருகே இருந்த வீட்டுக்குச் சென்றார். அந்த வீட்டுக்காரரை அழைத்து... ஐயா இந்தமாதிரி வரும்போது என் செருப்பு பிஞ்சுபோச்சு. புதுசெருப்பு வேற.. அதனால இதை இப்படியே தூக்கியெறிய மனசு வரல. இங்க உங்க வீட்டு வாசல் ஓரமா வெச்சிட்டுப்போறேன்... காலையில என் வீட்டு வேலைக்காரனை அனுப்பி எடுத்துக்கிறேன் என்றார்.அதற்குத் தாங்கள் அனுமதி தரவேண்டும் என்றார்.

அதற்கு அந்த வீட்டுக்காரர் அந்த செல்வந்தரைப் பார்த்து... ஐயா.. நீங்க எவ்வளவு பெரிய செல்வந்தர்..! எங்க வீட்டு வாசலில் உங்க செருப்பு கிடப்பது கூட எங்களுக்கு கௌரவம் தான். நீங்க தாராளமாக வெச்சிட்டுப்போங்க என்று சொன்னார். அதுக்கு பிறகு அவர் தன்னுடைய வேலைக்காரனை அனுப்பி செருப்பை பெற்று கொண்டார் சில ஆண்டுகள் கடந்தன... ஒருநாள் அந்த செல்வந்தரே இறந்து போனார். அவரின் இறுதி ஊர்வலம் செருப்பு வைத்தாரே அந்த வீட்டு வழியே வந்தது. அப்போது நல்ல மழை. பிணத்தைத் தூக்கி வந்தவர்கள் அந்த வீட்டுக்காரரிடம் சென்று...

ஐயா சரியான மழையாக இருக்கிறது தூக்கிச்செல்லமுடியவில்லை. அந்த உடலை இங்கு மழை நிற்கும் வரை வைத்துவிட்டு. பிறகு எடுத்துக்கொள்ள அனுமதி தருவீர்களா? என்று கேட்டனர்.அந்த வீட்டுக்காரர் அவர்களிடம் சொன்னார்.. ஏன்டா யார் வீட்டுப் பிணத்தை யார் வீட்டு வாசல்ல வைக்கப்பார்க்கிறீங்க? 'மரியாதையா எடுத்திட்டுப் போயிடுங்க என்று..அவ்வளவுதாங்க வாழ்க்கை ஒரு பிஞ்சு போன செருப்புக்கு கிடைக்குற மரியாதை கூட நம்ம செத்த பின்னாடி நம்ம உடலுக்கு கிடைக்காது வாழ்கின்ற கொஞ்ச நாள் எல்லார்கிட்டயும் முடிஞ்ச அளவுக்கு அன்பா வாழ்ந்துட்டு போவோம்...

(உயிர் உடம்புக்குள்ள இருக்கும் வரைதாங்க மனுசனுக்கு மரியாதை)

# திருந்த வேண்டியது நாம்தான்...

ஒரு ஊரில் ஒரு கோடீஸ்வரன் இருந்தான். அவனுக்குக் கடுமையான தலைவலி ஏற்பட்டது. பல ஊர்களிலிருந்து மிகப் பெரிய வைத்தியர்கள் வந்து பார்த்தும், வண்டி வண்டியாக மருந்துகள் சாப்பிட்டும் அந்தத் தலைவலி குணமாகவில்லை.

ஒருநாள் அந்த ஊருக்கு ஒரு சன்யாசி வந்தார். அவர் பணக்காரனை வந்து பார்த்தார். பார்த்துவிட்டு, அவருக்கு ஏற்பட்ட தலைவலிக்குக் கண்ணில் இருக்கும் ஒரு நோயே காரணம் என்று கூறினார். அந்தக் கண்ணைக் குணப்படுத்த ஒரே ஒரு வழிதான். அந்தப் பணக்காரன் பச்சை நிறத்தைத் தவிர வேறெதையும் பார்க்கக்கூடாது என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

பணக்காரன் முதலில் தன் வீட்டில் இருக்கும் எல்லாவற்றையும் பச்சையாக மாற்றினான். தலைவலி குணமாகி விட்டது. சன்னியாசி கூறியது சரிதான். உடம்பு சரியாகவே வீட்டைவிட்டு வெளியே போகத் தொடங்கினான். வெளியே போனால், இயற்கை எல்லா வண்ணங்களையும் அள்ளித் தெளித்திருந்தது. ஆனால், அவற்றைத்தான் அவன் பார்க்கக்கூடாதே!

நிறையப் பச்சைப் பெயிண்டையும் பிரஷ்ஷையும் கொடுத்து சில ஆட்களை நியமித்தான். அவன் போகும் வழியில் இருக்கும் ஆடு, மாடு, மனிதர், குடிசை, வண்டி, மேசை, நாற்காலி எல்லாவற்றுக்கும் பச்சை நிறத்தை அடிப்பது அவர்களுடைய வேலை. அவர்களும் முதலாளி சொன்னபடியே செய்து வந்தார்கள். சில மாதம் கழித்து மீண்டும் சன்னியாசி அதே ஊருக்கு வந்தார். வேலையாட்கள் அவரைத் தடுத்து நிறுத்தி, அவர் மீதும் பச்சை வண்ணம் அடிக்கப் போனார்கள்.

சன்னியாசிக்கு ஆச்சரியமாகிவிட்டது. காரணம் கேட்டார். அவர்கள் 'தங்கள் முதலாளியின் கட்டளை இது' என்று கூறினார்கள்.சன்னியாசி அதற்கு, "என்னை உங்கள் முதலாளியிடம் அழைத்துப் போங்கள்" என்றார். பணக்காரனுக்குத் தன் நோயைக் குணப்படுத்திய சன்னியாசி மீண்டும் வந்ததைக் கண்டு ஒரே மகிழ்ச்சி. வணங்கி அவரை உபசரித்தான்.

"இந்த ஊரில் எல்லாவற்றுக்கும் ஏன் பச்சைப் பெயிண்ட் அடிக்கிறீர்கள்?என்று சன்னியாசி கேட்டார். "ஐயா, நீங்கள் சொன்னபடிதான் நான் செய்கிறேன்" என்றான் அவன் மிகப்பணிவோடு. "நான் என்ன சொன்னேன்? என்றார் சன்னியாசி. "பச்சைநிறத்தைத் தவிர வேறெதையும் நான் பார்க்கக்கூடாது என்று கூறினீர்களே ஐயா" என்றான்.

"மகனே! நீ லட்ச லட்சமாகப் பணத்தைச் செலவழித்திருக்க வேண்டாம். ஒரு நூறு ரூபாய் கொடுத்து பச்சைக் கண்ணாடி வாங்கியிருந்தால், உன்னைச் சுற்றியிருக்கும் பொருள்களெல்லாம் பிழைத்திருக்கும்." உன் பணமும் வீணாகி இராது. உன்னால் இந்த உலகம் முழுமைக்கும் பச்சைப் பெயிண்ட் அடிக்கமுடியுமா? என்று கேட்டார் சன்னியாசி.

நம்மில் பலரும் இந்தக் கதையில் வரும் பணக்காரனைப் போலத்தான் இருக்கிறோம். நம்மைத் திருத்தி அமைத்துக் கொள்வதற்கு பதிலாக, உலகத்தை எப்படியாவது மாற்றியமைத்து விடுவது என்று மிகவும் முயற்சிக்கிறோம். அது சாத்தியமல்ல. மிகுந்த காலமும், உழைப்பும் விரயமான பிறகு தான் 'திருந்த வேண்டியது நாம்தான் என்பது புரிகிறது.

---

## கனவுகள் நிஜமாகும்வரை!...

எமை உறவாக எண்ணி
உடல்கள் மறைந்தும்
உணர்வுகளால் எம்முள்
நிலையாய் சங்கமித்து
மண்ணின் விதைகளாய்
வாழ்ந்து கொண்டிருக்கும்
என் தமிழ் உறவுகளின்
விட்டுச் சென்ற கனவுகளை
இன்று அல்ல நாளை
என்றாவது விருட்சங்களாய்
நிமிர்ந்து எழும்வரை
உறங்க மாட்டோம் உங்கள்
கனவுகள் நிஜமாகும்வரை!...

செல்வி அ.மதுஷா
"அருளகம்" - வவுனியா.

## பெண்...

மனிதர்களும் மதங்களும்
ஓர் உறவாய் பார்ப்பதும் இல்லை
நினைப்பதும் இல்லை...
உள்ளத்து உணர்வுகள்
உருப்பெற்று வாழ்ந்திடவே
உரிமைகளும் இங்கில்லை...
சமூகத்தில் ஒரு பொருளாக
சாகும்வரை வாழ்கின்றேன்
வறுமைகளையும் கவலைகளையும்
கண்ணீரையும் மறக்க
விழிமூடிக் கனவு காண்கின்றேன்...
எமது கனவு சிச்சயம் நிறைவேறும்
கனவுகள் என்றும் நிஜமாகும்
அன்று ஒரு விடுதலைப் பெண்
ஆவேன் நிஜமாக ஆவேன்!...

செல்வி சி.தவமலர்
"அருளகம்"- வவுனியா.

# சந்தேகம்....

(செல்வி ச கீர்த்தனா
ரூத் மிஷன்-கிளிநொச்சி)

ஒருநாள் இரண்டு தேவதைகளுக்குச் சந்தேகம் வந்தது. இறைவனிடம் பலரும் வந்து வேண்டிக் கொண்டனர். அப்படி வேண்டிக்கொள்ளும் போது " இறைவா நான் உன்னைத் தினமும் வணங்குகிறேன் " என்பது போலவே சொல்கின்றனர்....அதில் உண்மையான பக்தி உடையவர் யார் என்பதுதான் அவர்களின் சந்தேகம். அதை நேராக இறைவனிடம் சென்று கேட்டன. அப்போது இறைவன் தேவதைகளே!...இந்த ஊரில் பலரையும் போய்ச் சந்தித்து யார் எனது உண்மையான பக்தன் என்பதை விசாரித்துப் பாருங்கள் என்றார். உடனே தேவதைகள் புறப்பட்டுப் பலரிடம் சென்று விசாரித்தன.

ஒருவன் " நான் கோவிலுக்குப் போகாத நாளே இல்லை " தினமும் மூன்று வேளை கடவுளை வணங்குகிறேன் என்றான். அடுத்தவன் வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் தவறாது சென்று வழிபடுவேன் என்றான். இன்னொருவனோ துன்பம் கஷ்டம் வரும்போது கடவுளிடம் சென்று முறையிட்டு வணங்குவேன் என்றான். இப்படியாகப் பலரும் ஏதோ ஒரு சமயத்தில் கடவுளை நினைப்பவராகவே இருக்க இதில் யார் உண்மையான பக்தன் எனக் கண்டுபிடிப்பது என்ற குழப்பம் தேவதைகளுக்கு ஏற்பட்டது.அப்போது அவ்வழியே அவசரமாகச் சென்றுகொண்டிருந்த ஒருவனை நிறுத்தி " அப்பனே உனக்குக் கடவுள் பக்தி உண்டா" " நீ எப்போது கடவுளை வழிபடுவாய் " என்று ஒரு தேவதை கேட்டது. அதற்கு அவன் " எனக்குக் கடவுளை நினைக்கவே நேரமில்லை..அவசரமாகச் சிலருக்கு உதவி செய்ய வேண்டியிருக்கிறது நான் போகிறேன் " என்று பதில் கூறிவிட்டு ஏழைகளுக்கு உதவுவதற்காக அவன் விரைந்து ஓடினான்.

தேவதைகள் கடவுளிடம் திரும்பி வந்து நடந்தவற்றை அப்படியே விபரித்தன. எல்லாவற்றையும் கேட்ட கடவுள் மௌனம் சாதித்தார். " தேவதைகளே உண்மையான பக்தன் யார் என்று கண்டுபிடித்துவிட்டீர்களா " என்று கேட்டார். கண்டுபிடித்துவிட்டேன் என்றார் கடவுள். தினமும் மூன்று வேளை கோவிலுக்குப் வருபவன்தானா?..என்று கேட்டன தேவதைகள். கடவுள் புன்னகைத்தபடியே இல்லை!.. இல்லை!.. கடைசியாக என்னை நினைக்கக்கூட நேரமில்லாது ஏழைகளுக்குச் சேவை செய்ய ஓடினானே உண்மையில் அவன்தான் நல்ல பக்தன் என்றார்.

# நன்றி மறக்காதே!...

காட்டுவெளியில் ஒரு நாளில்
கலைமான் ஒன்று மேய்ந்ததுவாம்
வேட்டைக்காரன் தத்தனாமே
விரட்டிப் பிடிக்க முயன்றானாம்!...

குதித்து மானும் தப்பியதாம்
கொல்லும் வேடன் தனைக்கண்டு
உதித்து ஞானம் மிகக்கொண்டு
ஓடி மறைய எண்ணியதாம்!...

காற்றைப் போல வேகமுடன்
கடிதாய் விரைந்து ஓடியதாம்
மாற்றம் இன்றித்திசை பார்த்து
மானின்பின்னால் அவன்போனான்!...

சோலை ஒன்றைக் கண்டவுடன்
சுற்றி வந்த களை தீர
பாலைக் கண்ட பூனை என்று
பசித்து மானும் சென்றதுவாம்!...

மானைத் துரத்தி வந்தவனும்
மரத்தின் நிழலில் தங்கிடவே
தேனைக் கண்ட வண்டாகத்
திரும்பிச்சென்றான்சோலைக்குள்!...

நிழலில் நின்ற மான் தனது
நிலமைமறந்து இலையொன்றை
சுழலும் நாவால் கடித்ததுவாம்
சுவைத்து மெல்லத் தின்றதுவாம்!...

இப்படி இலைகள் அனைத்தையுமே
எளிதாய் மானும் கடித்திடவே
தப்படித் தூரத்தில் நின்றிட்ட
தத்தன் கண்ணில் பட்டனவாம்!...

தட்டிவிட்டான் அம்பெடுத்து
தஞ்சம் கொண்ட மரத்தினிலே
ஒட்டி இருந்த இவை எல்லாம்
ஒடித்துத் தின்ற மான் அந்தோ!...

உடனே மண்ணில் சாய்ந்ததுவாம்
உயிரும் துடித்து அடங்கியதாம்
மடமான் செய்த செயலாலே
மரணம் தானே மிஞ்சியதாம்!...

உதவி நமக்குச் செய்தவரை
ஒழித்துக் கட்ட முயன்றிட்டால்
கதறத் துன்பம் நமை வந்து
கட்டிக்கொள்ளும் அறிந்திடுவீர்!...

செல்வி சிறீ.ஆரணிகா

ரூத் மிஷன் ஜெயபுரம்-கிளிநொச்சி

# சுருக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 11

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 4 | 3 | | | | | |
| | 7 | | | | | | | 8 |
| | 9 | | 8 | | | 5 | 4 | 3 |
| | 3 | | | | 1 | 9 | | 7 |
| | | 1 | | | | | | |
| 9 | 2 | | 4 | | | | | |
| 7 | | | 2 | | | 3 | | 4 |
| 8 | | | | 7 | | | | |
| 6 | | | 9 | | | 1 | | |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 100
## (பங்குனி-சித்திரை-2018)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ – வ:

01-04 மகாகவி, புரட்சிக்கவி (ஒரு எழத்து விடுபட்டுள்ளது)

09-11 கூரான ஆயுதம்.

வ – இ:

07-06 தமிழர்கள் கல்வியை இந்த உறுப்புக்கு ஒப்பிடுவர்.

16-13 ஏற்றியும் விளையாடலாம் படித்தும் பெறலாம்.

கீ – மே:

11-03 இரண்டு பக்கத்தால் வாசித்தாலும் ஒரே சொல்

16-12 நம் தாயக பூமியில் ஒரு மரம்.

மே – கீ:

01-13 சாதகம் இதன் எதிர்ச் சொல்.

04-08 பலம் மிக்கது சைவ உணவையே உண்ணும் மிருகம்.

(விடைகள் இன்னொரு பக்கத்தில்)

# ஆண்டுகளின் பெயர்

நம்முள் பெரும்பான்மையோர் இவைதான் தமிழ் ஆண்டுகள் என நம்பிக்கொண்டிருக்கும் சமஸ்கிருதப் பெயர்களைக் காண்போம். இவற்றில் எதாவது ஒன்று தமிழ்ச் சொல்லாகவோ, தமிழ்ப் பெயராகவோ இல்லை என்பது தெளிவாகும். இந்த அறுபது பெயர்களுமே தொடராக வருடா வருடம் மாறி மாறி புதுவருடத்தின் பெயராக வந்துகொண்டே இருக்கும்.

| | | |
|---|---|---|
| 01-பிரபவ | 21-ஸர்வாஜித்து | 41-பிலவங்க |
| 02-விபவ | 22-ஸர்வதாரி | 42-கீலக |
| 03-சுக்கில | 23-விரோதி | 43-ஸௌமிய |
| 04-பிரமோதுத | 24-விக்ருதி | 44-ஸாதாரண |
| 05-பிரனோற்பத்தி | 25-கர | 45-விரோதிகிருதி |
| 06-ஆங்கிரச | 26-நந்தன | 46-பரிதாபி |
| 07-ஶ்ரீ முக | 27-விஜய | 47-பிரமாதிஸ |
| 08-பவ | 28-ஜய | 48-ஆனந்த |
| 09-யுவ | 29-மன்மத | 49-ராக்ஸ்ஸ |
| 10-தாது | 30-துன்முகி | 50-நள |
| 11-ஈஸ்வர | 31-ஹேவிளம்பி | 51-பிங்கள |
| 12-வெகுதான்ய | 32-விளம்பி | 52-காளயுக்தி |
| 13-பிரமாதீ | 33-விகாரி | 53-சித்தார்த்தி |
| 14-விக்கிரம | 34-சார்வரி | 54-ரௌத்திரி |
| 15-விஹி | 35-பிலவ | 55-துன்பதி |
| 16-சித்திரபானு | 36-சுபகிருது | 56-துந்துபி |
| 17-சுபானு | 37-சோபகிருது | 57-ருத்ரோத்காரி |
| 18-தாரண | 38-குரோதி | 58-ரக்மாஸி |
| 19-பார்த்திப | 39-விசுவாவஸ | 59-குரோதன |
| 20-விய | 40-பராபவ | 60-அஸ்ய |

## மாதங்கள்.....

| தமிழில் | வடமொழியில் | தமிழில் | வடமொழியில் |
|---|---|---|---|
| 01-சுறவம் | தை | கடகம் | ஆடி |
| 02-குப்பம் | மாசி | மடங்கல் | ஆவணி |
| 03-மீனம் | பங்குனி | கன்னி | புரட்டாதி |
| 04-மேழம் | சித்திரை | துலாம் | ஐப்பசி |
| 05-விடை | வைகாசி | நளி | கார்த்திகை |
| 06-ஆடவை | ஆனி | சிலை | மார்கழி |

# ஒலிகள்

சில உயிரினங்களின் ஒலிகளை இங்கே தருகின்றோம். இதில் சிலவற்றின் ஒலிகளை உங்களுக்குத் தெரியாமலும் இருக்கலாம். ஆகவே தெரியாததைத் தெரிந்து கொள்வோம்.

நாய்-குரைக்கும்
பசு-கத்தும்
எருது-எக்காளமிடும்
குதிரை-கனைக்கும்
கழுதை-கத்தும்
பாம்பு-சீறும்
நரி-ஊளையிடும்
ஓநாய்-ஊளையிடும்
முள்ளம்பன்றி-உறுமும்
சிங்கம்-கர்ச்சிக்கும்
பூனை-கத்தும்
ஆடு-கத்தும்
எலி-கீச்சிடும்
பன்றி-உறுமும்
தவளை-கத்தும்
குரங்கு-அலப்பும்
கரடி-உறுமும்
யானை-பிளிறும்
புலி-உறுமும்

கோழி-கொக்கரிக்கும்
வாத்து-கத்தும்
குருவி-கீச்சிடும்
புறா-குறுகுறுக்கும்
வான்கொழி-கொறகொறக்கும்
தேனீ-ரீங்காரமிடும்
வானம்பாடி-பாடும்
சேவல்-கூவும்
காகம்-கரையும்
குயில்-கூவும்
கிளி-பேசும்
மைனா-கீச்சிடும்
ஆந்தை-அலறும்
கழுகு-அலறும்
மயில்-அகவும்

## பொன்மொழிகள் சில...

1-இனிமைக்கு இலங்கணம் இரண்டொரு சொற்கள் பேசுதல்..

2-காலம் கருது..அளவோடு பேசினால் எதுவும் நன்மையே..

3-கடமை கண்போன்றது. காலம் பொன் போன்றது..

# பொது அறிவு

01-உலகிலேயே பரப்பளவில் சிறியநாடு எது?.
வத்திக்கான்

02-உலகிலேயே மிகப்பெரிய தீவு எது?.
கீறீன்லாந்து

03-உலகிலேயே மிக உயர்ந்த பீடபூமி எது?.
தீபெத் பீடபூமி

04-உலகிலேயே மிகப்பெரிய பாலைவனம் எது?.
சஹாரா பாலைவனம் (ஆபிரிக்கா)

05-உலகிலேயே மிகவும் வரண்ட பாலைவனம் எது?.
ஆடகாமா பாலைவனம் (சிலி)

06-உலகிலேயே மிகப்பெரிய கண்டம் எது?.
ஆசியாக்கண்டம்

07-உலகிலேயே மிக உயரமான நீர்வீழ்ச்சி எது?.
ஏஞ்சல் நீர்வீழ்ச்சி (வெனிசூலா)

08-உலகிலேயே மிக அகலமான நீர்வீழ்ச்சி எது?.
நயாகரா நீர்வீழ்ச்சி (கனடா)

09-உலகிலேயே மிக உயரமான மலைச்சிகரம் எது?.
எவரெஸ்ட் (நேபாளம்- 8848மீட்டர்)

10-உலகிலேயே மிகப்பெரிய வளைகுடா எது?.
மெக்ஸிக்கோ வளைகுடா.

செல்வி ச.சானியா
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்

# அறிந்துகொள்வோம்!......

இந்து சமயம் சொல்லி வைத்த நமக்குத் தெரியாத உண்மைகள். சித்திரை 1 ஆடி 1 ஐப்பசி 1 தை 1 இவற்றை எல்லாம் விழாவாக நாம் கொண்டாடுறது ஏதோ ஒரு சடங்கு / பழக்கம் நினைத்துக்கொண்டிருக்கிறோம். நம் முன்னோர்கள் இதுக்கு பின்னாடி மிகப்பெரிய அறிவியலை வைத்திருக்கிறார்கள் தெரியுமா...? "சூரியன் உதிக்கும் திசை கிழக்கு"என்று சிறு பிள்ளைகளுக்கு சொல்லித் தருகிறோம். என்றாவது ஒரு அளவை வைத்து சூரியன் உதிக்கின்ற போது சோதித்து இருக்கிறோமா? என்றால் கண்டிப்பாக இல்லை... என்று தான் சொல்ல வேண்டும். வெள்ளையர்கள் நம்ம அறிவியலை அழித்துவிட்டு, ஒரு முட்டாள் தனமான கல்வியை புகுத்தி விட்டான் என்பதற்கு இதுவும் ஒரு சான்று.... ஆம் சூரியன் ஒரு குறிப்பிட்ட நாளில் மட்டுமே சரியாக கிழக்கே உதிக்கும்..!! பின்னர் கொஞ்சம் கொஞ்சமா வடகிழக்கு நோக்கி நகர்ந்து, ஒரு குறிப்பிட்ட புள்ளியில் மறுபடியும் தெற்கு நோக்கி திரும்பும்... அதன் பின் மறுபடியும் ஒரு நாள் கிழக்கே உதிக்கும், அப்பறம் தென்கிழக்கு நோக்கி நகரும்... இப்படி சரியாக கிழக்கில் ஆரம்பித்து, வடகிழக்கு, தென்கிழக்கு என்று போய் மறுபடியும் கிழக்குக்கு வர ஆகிற நேரம் சரியாக ஒரு வருடம்..!!

சரி... இதுக்கும் தமிழ் மாதத்திற்கும் என்ன சம்பந்தம்? சூரியன் தன் பயணத்தை கிழக்கில் ஆரம்பிக்கும் நாள்தான் சித்திரை 1 தமிழ் புத்தாண்டு. (In science it is called Equinox) பின்பு சரியாக வடகிழக்கு புள்ளி தான் "ஆடி 1 "ஆடி பிறப்பு. (solstice) மறுபடியும் கிழக்குக்கு வரும்போது "ஐப்பசி 1'. தீபாவளி.(equinox) மீண்டும் சரியாக தென்கிழக்கு - இப்போது 'தை1'. பொங்கல். (solistice) இந்த வானியல் மாற்றங்களையும், அதனை சார்ந்த பருவ கால மாற்றங்களையும் நன்கு உணர்ந்து இருந்த நம் முன்னோர்கள், இவற்றை அனைவரும் அறியும் வகையில் தான் திருவிழாக்களாக கொண்டாடினார்கள்... சித்திரை (equinox) - புத்தாண்டு. ஆடி (summer solstice) - ஆடிப்பிறப்பு. ஐப்பசி (equinox)- தீபாவளி. தை (winter solstice) - பொங்கல். இது நமது அடுத்த தலைமுறைக்கு நமது பாரம்பரியத்தை வெறும் சடங்காக மட்டும் அல்லாமல் அதில் மறைந்துள்ள அறிவியலையும் கொண்டு சேர்ப்போம்... நமது முன்னோர்கள் "தன்னிகரற்ற" மாபெரும் அறிவாளிகள் . மிகவும் மகத்தானவர்கள்.

# குறளும் பொருளும்

நிலையாமை: –

331. நில்லா தவற்றை நிலையின வெள்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

332. கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று.

333. அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்றா
லற்குப வாங்கே செயல்.

334. நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்.

335. நாச்செற்று விக்குண்மேல் வாராமு னல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

336. நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு.

337. ஒருபொழதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல.

338. குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்போ டுயிரிடை நட்பு.

339. உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

340. புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினுட்
டுச்சி லிருந்த வுயிர்க்கு.

# குறளும் பொருளும் (தான் தனது என்பவை நிலை நில்லாமை)

331. நிலையற்ற பொருட்களை நிலை நிற்பன என்று கருதும் அறியாமையானது இழிவுடையது ஆகும்

332. ஒருவரிடம் பெரும் செல்வம் குவிவது நாடக அரங்கிற்கு மக்கள் போவது போலவும் ஆகும்.

333. செல்வம் நிலையற்றது அது வந்து சேர்ந்த நாளில் நிலையான அறச்செயல்களைச் செய்துவிட வேண்டும்.

334. வாளின் கூரிய வாய், பொருளை இரண்டாக் துண்டிப்பது போன்று, நாளின் வரையறை மனித உடலையும் உயிரையும் துண்டிக்கும் என்பதை உணர வேண்டும்.

335. பேச்சு அடங்கி, விக்கல் எடுத்து, இறப்பதற்கு முன்னமேயே நற்செயல்கள் பலவற்றைச் செய்துவிட வேண்டும்.

336. உலக மக்களின் வாழ்வு நேற்று உயிருடன் இருந்தவன் இன்று இல்லை என்று கூறும்படியான பெருமைக்குரியது இவ்வுலகம்.

337. ஒரு பொழுதளவுகூட உயிருடன் இருப்போம் என்பதை அறியாத உலக மக்கள் பலகோடி எண்ணங்களை எண்ணுவார்கள்.

338. முட்டையுள் இருந்து பறவை பறந்து வெளிச்செல்வதற்கு ஒப்பாகும் உடம்பிற்கும் உயிருக்கும் இடையில் உள்ள நட்பு.

339. உறங்குவது போன்றது இறப்பு. உறங்கி விழிப்பது போன்றது பிறப்பு.

340. உயிருக்கு நிலையான ஓர் உடம்பு கிடைக்காததனால் அவ்வுயிர் ஒவ்வோர் உடம்பினுள்ளும் தங்கியிருக்கும்.

# காசி ஆனந்தனின் சிந்தனைகள்!...



## இரவல்:-

கிழட்டு அணில் மற்ற அணிலைப் பார்த்து " அடுத்தவர்களின் உழைப்பில் வாழ்வதே சிலருக்கு வாழ்க்கையாகிவிட்டது பார் " என்றது. " ஏன் அப்படிச் சொல்கிறாய் " என்று கேட்டது இரண்டாம் அணில். கிழட்டு அணில் சொன்னது " ஓணானைப் பார்த்தேன் யாரோ ஒரு மனிதன் புதுவீடு கட்டிக்கொண்டிருக்கிறானாம் " பக்கத்தில் குப்பை மேட்டில் ஒரு பல்லி இருந்ததாம் " அது ஓணானிடம் ஏதோ சொன்னதாம். என்னவாம்?...என்று கேட்டது இரண்டாம் அணில். கிழட்டு அணில் சொன்னது..

" எனக்குத்தான் வீடு கட்டுகிறான் என்றதாம் பல்லி "

## இலக்கு:-

மைதானத்தின் இரு பக்கங்களிலும் புல்லும் கொள்ளும் பச்சைப் பசேலென்று செழித்திருந்தன. குதிரை ஓட்டப் போட்டி தொடங்கியது " இந்தக் குதிரைகள் கொள்ளையோ புல்லையோ கொஞ்சம் கூடத் திரும்பிப் பார்க்காமல் ஓடுகின்றனவே " என்று ஓர் ஆடு மற்ற ஆட்டைப் பார்த்துக் கேட்டது. " போட்டிக் குதிரைகள் அப்படித்தான் " என்றது இரண்டாம் ஆடு. பிறகு அது சொன்னது..

வெல்லப் பாயும் குதிரை புல்லைப் பார்க்குமா?..
கொள்ளைப் பார்க்குமா?...

## உணர்ச்சிகளின் உன்னதம்!...

நல்நெறி வி நந்தகுமார்
யேர்மனி

உணர்ச்சி தெரிவு செய்வதற்கு, தெளிந்த அறிவு வேண்டும்.
உணர்ச்சி உண்மையான நண்பனை உருவாக்கித் தரும்.
உணர்ச்சி வேகத்தில் பலன்கள் வித்தியாசப் படுகின்றன.
உணர்ச்சி உடல் அமைப்பின் இன்றியமையாத இயக்கம்.
உணர்ச்சி பாதிப்பையும் கொடுக்கும், பாதுகாப்பையும் கொடுக்கும்.
உணர்ச்சி உணர்ந்து சிந்தித்து உன ்னத உயர்வு பெறுகிறது.
உணர்ச்சி உழைப்பில், உபாயத்தை ஊட்டி வைக்கிறது.
உணர்ச்சி பலன்களை எதிர்பார்க்கிறீர்கள், ஏற்றுக் கொள்கிறீர்கள்.
உணர்ச்சி உண்மை பேசி, உத்தமனாய் வாழ வைக்கிறது.
உணர்ச்சி நம்மை நாமே, நல்வழிப் படுத்தப் பழகுகிறோம்.
உணர்ச்சி கவலைகளைத் தாங்கி, மன்னிக்கும் தன்மை பெறுகிறது.
உணர்ச்சி சரி, பிழை, தவறுகள் தெரிந்து புரிந்து திருந்துகிறோம்.
உணர்ச்சி உண்மைகளையும், யதார்த்தங்களையும் புரிய வைக்கிறது.
உணர்ச்சி உற்சாகமான விடா முயற்சிகளை விதைத்துச் செல்லும்.
உணர்ச்சிஊட்டத்தில்குழந்தைகள் பாராட்டை உணர்ந்து கொள்கிறார்கள்.
உணர்ச்சி வெவ்வேறு சூழ்நிலைகளில் வெவ்வேறு விதமாக மாறுகிறது.
உணர்ச்சி உந்தப்படாது மனப்பக்குவம் வளரப் பாடுபட வேண்டும்.
உணர்ச்ச உணரும் ஒவ்வொரு திறமையும், உங்களை உயர்த்தும்.
உணர்ச்சி நிறைய விஷயங்களைக் கற்றுக் கொள்ளத் தூண்டுகிறது.
உணர்ச்சி உணரும் தவறுகள், தாங்க முடியாத துயர்களைத் தவிர்க்கும்.
உணர்ச்சி உலகை வெறுப்புடன்பாராமல், விருப்புடன்பார்க்க வைக்கிறது.
உணர்ச்சி தவறுகள்திணிக்கப்படும்போது, துயரங்கள்தலை தூக்குகிறது.
உணர்ச்சி உன்னிடமிருந்து புறப்படும்போது, எண்ணங்களை வழிநடத்துகிறது.
உணர்ச்சி பூரிப்பில் இருந்து, பரிபூரண திறமை வெளிப்படுத்தப்படுகிறது.
உணர்ச்சி செயல் வடிவம் புரிந்து கொண்டால், புனர்வாழ்வு பூத்துக் குலுங்கும்.
உணர்ச்சி வசப்பட்டு புனிதமான மனத்தை வெறுப்புணர்ச்சியாக மாற்றாதீர்கள்.
உணர்ச்சி கோபம் ஒன்றைச்செய்கிறது, அன்பு இன்னொன்றைச் செய்கிறது.
உணர்ச்சி ஒருநாளை வெற்றியாகவும், ஒருநாளை தோல்வியாகவும் தருகிறது.
உணர்ச்சி உங்கள் ஆசைகளை அதிகமாக்கி, உலகத்துடன் மோத வைக்கிறது.

# குறுக்கெழுத்துப்போட்டி-163
## (வைகாசி-ஆனி-2018)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

**இ-வ**

01-05 உலகம் முழுவதும் இவர்களுக்கு ஒருநாள் கொண்டாட்டம்.

15-21 இலங்கை வடபகுதியில் ஒரு ஊர்.

30-32 பலசரக்கு உணவுப்பொருள்.

47-49 மெலிந்தது என்று பொருள்படும்.

**வ-இ**

11-09 ஒரு மாதத்தின் பெயர்.

14-12 ஒரு நாட்டின் இது சிறப்பாயிருந்தால் நாடு முன்னேறும்.

25-23 இலக்கியத்தில் ஒருவர்.

28-25 செயற்கை இதன் எதிர்ச்சொல்.

34-32 சினிமாவில் வரும் ஒரு பாத்திரம்.

42-40 மனைவி ஒத்தசொல்.

**கீ-மே**

20-06 மருத்துவ குணம்கொண்ட செடி.

28-07 ஆண்டவன் ஒத்தசொல்.

45-31 பனையின் மூலப்பொருள் ஒன்று.

46-25 வாசமான பூ இது.

**மே-கீ**

01-43 சங்ககாலத்து நூல் ஒன்று.

28-49 ஐரோப்பாவில் ஒரு நாடு.

30-44 நமக்கு இது சுத்தமாக இருக்க வேண்டும்.

34-48 உடலில் ஒரு உறுப்பு.

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)

# சுடு காட்டு மண்... (கவி மீனா)

மண் சட்டி பானைகளில் சமைப்பதை மறந்தவர்களும், மண் பானையில் தண்ணி நிரப்பி வைத்ததை மறந்தவர்களும், மண் சிட்டியில் விளக்கு ஏற்றியதை மறந்தவர்களும் நமது மண் வாசனையை மழைத் தூறலின் போது நாசியில் நுகர்ந்ததை மறந்தவர்களும் நம் நாட்டு மண்ணை, நம் முற்றத்து மண்ணை, நம் கடற்கரை குருமணலை மறந்து போனாலும், கடைசியில் மண்ணுக்குள் போவதை மறக்க முடியுமா? இல்லை தவிர்க்கத்தான் முடியுமா?

தூர தேசம் சென்றாலும், மாட மாளிகையில் உட்கார்ந்தாலும், வானமீதிலே பறந்து தேசங்கள் போனாலும், மனித பிறப்பு எடுத்தவருக்கு சொந்தம் இந்த மண்தான். மண்ணை பிடிக்கவும், மண்ணுக்காக அடிபடவும், மண்ணுக்கு உரிமை கோரி உறவுகள் பிரிவதும், அடுத்தவன் மண்ணை எடுக்கப் பாடாய் படுவதும் எதுக்காக?

மண்ணை நாம் சொந்தம் கொண்டாட முடியுமா? மண்தானே எம்மை சொந்தம் கொண்டாடக் காத்திருக்கிறது. எங்கே நீ போனாலும் கடைசியில் நீ என்னை தேடி வருவாய் எனக் காத்திருபதும், இறுதியிலே எம்மை இரு கரம் நீட்டி அணைத்துக் கொள்வதும் இந்த மண் ஒன்றே. யார் கை விட்டாலும் கைவிடாது தாங்கி நிற்கும் இந்த மண். மண் நாட்டுக்கு நாடு வேறு பட்டாலும், செம் மண், குரு மண், களி மண் சேற்று மண், எதுவானாலும் எமக்கு சொந்தம் ஒரு புதை மண்ணே!


அதுவே சுடுகாட்டுச் சாம்பல் மண் இதை அறிந்தவர் உண்டோ? அறியாமையில் ஆணவம் கொண்டு அலையும் மனிதரை ஞான வழியில் கொண்டு வரவே சிவனும் சுடுகாட்டில் சாம்பலை பூசி நத்தனம் ஆடுகிறான். ஆடும் ஆட்டம் எல்லாம் இறுதியில் ஒரு பிடி சாம்பலே அதுவே எமக்கு சொந்தமாகும் சுடு காட்டு மண்!...

---

நல்மொழி!........

அறிவே நல்லதொரு மனிதனைத் தொடங்கி வைக்கிறது
ஆனால் அதுவே அவனை முழுமையடைய வைக்கிறது...

# மண் இதழ் 188 - அட்டைப்படக் கவிதை




முப்பொழுதும் பணிசெய்தும் முடிசூடா இராஜகுமாரிகளின்
முழுமையினை அறிவதற்கு முத்தாய்ப்பாய் வருகின்றநாள்...
இப்புவியில் வருகின்ற இருபத்தெட்டுப் பங்குனித்திங்கள்
இன்பத்தினையும் உறுதியினையும் இளமனதில் பதியமிடும்...

செப்புகவி பாரதியின் செழுமைமிக்க கவிதையின்வரிகள்
செந்தமிழ் மாதர்களின் சிறப்புகளுக்கு உரம்சேர்க்கும்..
அற்புதங்கள் நிகழ்த்துகின்ற அரிவையரின் சாதனைகள்
அகிலத்தில்ப் பதிவுகளாகி அரியணையில் கோலோச்சும்..

சொப்பனங்கள் எல்லாமே சுரம் சேர்த்து சுவைதருவதில்லை
சொரிகின்ற மலர்களிலே சுரக்கின்றதேன் இருப்பதில்லை..
கற்பனைக்கு அப்பாலும் களிப்பான பலரின் வாழ்க்கையுண்டு
காலத்தின் சுழற்சியினிலே கவலைகளும் வந்து சூழ்வதுண்டு..

பொப்பிசையில் சக்கரவர்த்தியாய்ப் புகழ்பூத்த ஏ.ஈ.மனோகர்
போரினாலும் இடம்பெயர்ந்து பெருமைசேர்த்த நடிகரானார்..
தெப்பமெனத் தமிழர்கள் வாழ்வு திசைமாறிப் போனவேளை
தென்னகத்தில் பூதலுடலைவிட்டு தெய்வபதம் அடைந்தாரே..

அம்பலவன்புவனேந்திரன்..

# எரிந்த கதிர்கள்...

மாரியிலும் கோடையிலும்
மகிழ்ந்திருந்த மண்ணில்
மங்கலம் அறுந்தபோனது..
ஏரிகள் குளங்கள்
எல்லாமே எரிந்து
எரிக்கிலைச்செடிபூத்தது...
இயந்திரப் பறவைகளை
ஏவியேவிட்டதனால்
எச்சிலை எம்மில் துப்பியது..
ஏவுகணை வீச்சில்
எங்களின் மனைகள்
எமக்கே சமாதியாய் ஆனது..
கொடியும் பிஞ்சும்
பூக்களும் காய்களும்
கொடும் தீயில் கருகியது..
இராணுவத் தோல்வியை
ஏற்காத சிங்களம்
இரசானக் குண்டுகுளை
இரவினில் தூவியது...
கோரத்தாண்டவம் முடிவுக்குவந்திட
கொத்துக் குண்டுகள்
கோடியுயிர் குடித்தன...
முல்லை நிலத்தின்
மூர்க்கத்தை நசிக்கிட
முள்ளிவாய்க்காலில்
பூட்சுகள் புதைந்தன...
நெய்தலும் மருதமும்
நெருங்கிக் கிடந்த பூமியை
நெருப்பாறு ஓடிவந்து
நீள் நாக்கால் தின்றது..
மணலாற்றுப் படுக்கையில்
மரிப்பின் எண்ணிக்கை
மலையளவென்றுமானிடம் அழுதது..

மௌன இரவினில்
நடந்த கொடுமையைக் கண்டும்
குரல் கொடுக்காத தேசங்கள்
கூட்டாய்ச் சேர்ந்து
கும்மாள மடித்தன..
மனிதம் அங்கே மரித்ததா
மானிட உயிர்கள் மலிவானதா
புனிதர் வாழ்ந்து போதித்திட்ட
புத்தம் கூட செத்துவிட்டதா..?
பாரிடம் முறையிடுவோம்
யாரிடம் சொல்லியழுவோம்
காற்றும் காதடைத்துச் சென்றது
கடலும் கைகட்டி நின்றது...
நேற்று நடந்ததுவாய்
நினைவலைகள் வந்து
நெஞ்சாங்கூட்டை
உடைக் கின்றது..
நீதியின் கண்களும்
நிரந்தரமாய் மூடியிருக்குமா
நீசர்களின் கைகள்
அகலத்தான் நீளுமா..?
கேள்விகளே வேள்விகளாகி
காலம்தான் கரைகிறது
கிளைகளுக்கும் வேர்களுக்கும்
இடைவெளிகள் விரிகிறது..
எரிந்தச் சூரியர்களின் தடங்களில்
எழுகதிர்கள் முளைக்குமா
எதிர்காலப் பாடல்களில்
எம்தேசம் எழுந்து மகிழுமா..?

--அம்பலவன்புவனேந்திரன்..



## அன்னைபூபதி

காலத்தின் வேருன்றி
கலங்கரையின் விளக்காகி
ஞாலத்தில் மூபத்தகவை
நம்மினத்து விடுதலைக்காய்
ஆகுதியான தாயே
தியாகங்கள் சாய்வதில்லை
தீர்ப்புக்கள் எட்டவில்லை
நம்மினத்து விடுதலைக்காய்
மூபத்து நாட்கள்
உனை உருக்கி நின்று
உலகிற்கு பாசறைந்தாய்
தமிழினத்து தற்காப்பு
உயிருக்கு நிகரென்றாய்
ஆகுதித்தாயே நீயே
அன்னை பூபதியே
அடங்காபற்று வீரம்
தாய் இனத்து தமிழ்உரமும்
தாங்கி நின்ற விடிவெள்ளி
தியாகப்பேரொளியே
வலம்புரி வைகறையே
வணங்கும் தாய்நிலமே
உறங்காது உன்தியாகம்
ஒயாது தமிழ்கீதம்
உந்தன் திருவடியில்
எங்களின் வாழ்காலம்.

வசந்தா ஜெகதீசன்

## தொழிலாளர் தினம்!.....

காடுகள் அழித்து
கழனிகளாக்கி வளம்பெற
மேடு பள்ளம் பாராது
குன்றிலும் குழியிலும்
நெற்றி வேர்வை சிந்தப்
பாடு படும் தொழிலாளர்
வெற்றி ஈட்டிக் கொடுத்திடுவர்
முதலாளி வர்க்கத்துக்கு
மொழி குன்றி விழி
பிதுங்கி நிற்பதறிந்து
தொழிலாளரை அடக்கி
அதிகாரப்படுத்தி மிரட்டி
களி பேருவையோடு
கடுமையாக வேலைவாங்கும்
முதலாளி வர்க்கம்
விழித்தெழ முழங்கிடுவீரே
மேதின நன்நாளிலே
உரத்துக் குரல் எழுப்பும்
தொழிலாள வர்க்கம்
உடலில் உதிரும்
உதிரம் முழுவதும்
உலகினுக்கே கொடுத்திடும்
தொழிலாள வர்க்கத்தின்
உரிமைகள் சுலபமாய்ப்பெற்று
வாழ்வு வளம்பெற நலம்பெற
இந்நாள் சிறப்புற அமையட்டும்
தொழிலாளர் ஒற்றுமை என்றும்
ஓங்கி ஒலித்து ஒளிமயமாகட்டும்!..

இராஜேஸ்வரி சிவராசா

# சுமைகளே-----

உயிரென நாமும் உருவான கணமே
உறைந்துள்ள கருவாகி உருப்பெறும் வரை சுமையே
பிறந்திட்ட நாள் முதலாய் பேணி வளர்ப்பவருக்கும் சுமையே
வளர்ந்திட்ட பின்னாளில் வாழ்க்கைக்குள் சுமையே
வலுவாக்கி நாம் சுமக்கின்ற வரைக்கும் பிறருக்குச் சுமையே
உழைப்பாக்கி உறவுகளைக் காக்கின்ற உறவுக்குச் சுமையே
உடலதனைத் தாங்குகின்ற தரைக்கும் நாம் சுமையே
சுமை இங்கு சுற்றுப்புறமாகிச் சுழல
அகத்தினுள் அகப்படும் அவலமும் சுமையே
தகர்கின்ற தாய்த்தேசம் தாங்குகின்ற சுமைகள்
தவிடு பொடியாகி உடலங்கள் உடைகின்ற வலிகள்
உணவின்றி உதிரத்தின் உறவுகள் இறக்கின்ற நிலைகள்
நோய் நொடியோடு சேய்களும் தான் சிதைகின்ற வலிகள்
அடிபடும் மனங்களில் ஆழப்பதிக்கின்ற ரணங்கள்
உயிர் பேர்கும் நிலையிலே உடனிருந்திட்ட கணங்கள்
விடுபட முடியாது வேரூன்றிடும் சுமைகள்
அந்தக் கணங்களின் ரணங்களாய் தைக்கின்ற முட்கள்
அகற்றிட முடியாத ஆணிவேர் கொண்டிட்ட சுமைகள்
இழப்பின் வடுக்களாய் இணைந்தே பிணைந்தவை
இலக்கின் வலுக்களில் இவையும் உறைந்தவை
சுமையாய்ச் சுமப்பவை சுழன்று தொடராது
நிலையாய் நில்லாது நிரந்தரம் கொள்ளாது.

வசந்தா ஜெகதீசன்.

### மனைவி....

பூவாய் வாழ்ந்து
இந்தப் பூமிக்கு
புதிய பூக்களை
கொடுப்பவள்தான் மனைவி....

### பேனா...

மென்மையான கருவி
வலிமையானவர்களை
மெல்லினப்படுத்தும்
சக்தி மிக்க ஆயுதம்....

## பாலு!... (கவி மீனா)

பிறந்தகுழந்தை குடிக்குதடா பாலு
அது அழுது அழுது அடம் பிடித்து
குடிக்குதடா பாலு
ஒருவர் இறந்து விட்டால் வாயில்
ஊத்துறாங்க பாலு
அழுது அழுது ஊத்துறாங்க பாலு
முதலிரவிலும் குடுக்கிறாங்கபாலு
மனம் வெள்ளையாக வாழச்
சொல்லி கொடுக்கிறாங்க பாலு!...

பிறந்த குழந்தை பசியாற
தாய் கொடுக்கும் பாலு
அந்த இறைவன் படைப்பில்
தாய்க்கு ஒரு வரமாய்
கிடைத்தது அந்த பாலு
வாழும் வரை பசியாற
உணவாகும் பாலு
மடிந்த பின்ன வழி அனுப்ப
உதவும் இந்த பாலு!...

வீடு கட்டி பால் காய்ச்ச
வேணும் இந்த பாலு
சாமிக்கு அபிசேகிக்க
ஊத்தும் பசும் பாலு
பால் போல் வெள்ளை மனம்
என்று சொல்ல வைக்கும்பாலு!..

பால் போலே வான் நிலவு
வரக் கண்டு மனசு
பால் போலே வெண் புன்னகை
காட்டி மகிழும் நேரம்
பால் போலே வெண் மல்லிகை
மலர்ந்து மணம் வீசக் கண்டு
மகிழ்ந்து ஆடும் தென்றலிலே
மனம் பறி போய் நின்றேனே்!..

## பதில் சொல்!....

செல்வி சி யாழினி
அருளகம் - வவுனியா

மானிடம் தொலைந்த
மனித ஜென்மங்களே
மலரநினைத்த மொட்டுக்கள்
கொடுரம் தனை அறழவாயோ-நீ...
வெள்ளைச் சீருடையில்
பள்ளி சென்ற சிறுமியின்
ஆசைகள் எத்தனை
எல்லாம் ஒரு நொடியில்
கருகியதை அறிவாயோ-நீ....

யாருக்கு என்ன பிழை செய்தாள்
கொடுர மிருக வேட்டைக்கு
இரையாகிப் போய் - மண்ணில்
வெற்றுடலாய் தரையில்
கிடந்த கொடுரத்தைஅறியாயோ-நீ...
மானம் காத்த தமிழ் மண்
இன்று மானம் இழந்து வாழ்வதை
பூமித்தாயே அறியாயோ - நீ...

போரின் வேதனைகளில் கூட
காத்து வந்த தமிழ்த்தாய்
இக் கொடுர காமவெறியில்
காப்பாற்ற மறந்ததேன்
இதயம் உள்ளவர்களும்
கல்லாகிப் போயினர்
உன் மரணத்தைக் கண்டு.....

பெண்ணாய்ப் பிறந்தது குற்றமா
பள்ளி செல்லத் துணிந்தது பிழையா
பெண் விடுதலைக்காய் போராடிய
வீரப்புருசர்களின் கனவுகள்
விதைக்கப்படுவதை அறிவாயோ-நீ.
பதில் சொல் நீ......

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!....



இரத்தமும் உயிரும் உறைந்து
அனலடிக்கும் இந்த மணல் வெளியில்
நேற்றும் பட்டி பூத்திருந்தது

இன்றும் பூத்திருந்தது பட்டி.
இன்று
வெள்ளை உடைகளில்
விருந்தாளிகள் வந்தனர்.
சுடர்களை ஏற்றினர்.
பட்டிப் பூக்களை மேவி
எடுத்து வந்த பூக்களைப் பரப்பினர்

மலர் வளையங்களைச் சாத்தினர்
துயரும் அழகையும் மீட்டப்பட்டது
மண்ணடுக்குகளில்
துயரின் ஆழப் படுகைகளில்

புதைந்துறங்கிய மனிதர்கள்
மெல்லக் கண் திறந்து
நேற்றைய நாளை நினைவு
கூர்ந்தனர் அப்படியே

இன்றைய நாளைப் பார்த்தனர்.
பெருகியோடும் கண்ணீரில்
பலியிடப்பட்டோரையெல்லாம்
எரியும் சுடர் பிரதிபலித்தது
பொழுதுகளில் துயர் விழாவின்

காட்சிகளெல்லாம்
மெல்ல மாறின
ஏற்றிய சுடர்கள் அணைய முன்
பரப்பிய மலர்கள் வாடமுன்
எல்லோரும்திரும்பிச் சென்றனர்.

மண்ணடுக்குகளில்
விழிதிறந்த மனிதர்கள்
மறுபடியும் தனித்தனர்
பட்டிப் பூக்களும் தனித்தன
நாளையும் தனித்தே பூக்கும்
பட்டி!...

# தேன் சிந்திய வானம்!.....

தேன்சிந்தும் வானமதில் தேமதுரச் சுவையாய்
திரண்டுவந்த கவிமழையில் தினம் நனைந்தேன்
திகட்டாத இன்பத்தை மனதோடு ரசித்தேன்
தொடாத சுவையெதுவென வியந்தேன்
தொடுத்துத் தந்த தமிழாரம் சூடிக் களித்தேன்!...

சங்கேமுழங்கெனும் சங்காரம் கேட்டு சிலிர்த்தேன்
பந்தியிட்ட சுவையாய் பாசவரிகளில் கரைந்தேன்
மனமொரு குரங்கெனும் மந்திரச்சொல் கேட்டுஎழுந்தேன்
வீடுவரை உறவெனும் தத்துவம் புரிந்து தெழிந்தேன்-!...

கண்ணனின் தாசனோ கலைமகள் நேசனோ
எண்ணிலாக் கவிகளை ஏட்டிலே தந்தான்
மண்ணிலே இவன்போல் அனுபவப் பாடத்தை
அள்ளிச் சொரிந்த மற்றொரு கவியுண்டோ
தெள்ளு தமிழுக்கு மகுடம் சூட்டிய வரகவியென
மனதிலே உயர் சிம்மாசனம் அமைத்தேன்!....

கோப்பையிலே குடியிருந்து கோலமகள் துணையாக்கி
அர்த்தமுள்ள இந்துமத்தை ஆழப் பருகி
மெஞ்ஞானியாய் தத்துவமேதையாய் அரசியல் வாதியாய்
கற்றுணர்ந்த வித்தகனாய் கவிஞரின்
பல்முகம் கண்டு திகைத்தேன்
படிக்காத மேதையாய் பாரதியின் காதலனாய்
காலங்கடந்தும் வாழ்கிறார் மனங்களிலென உணர்ந்தேன்!...

புண்பட்ட மனதிற்கு ஒத்தட வரிகண்டு சிரித்தேன்
பண்பட்ட கலங்கரை விளக்கின் ஒளியாய் வரைந்தேன்
தமிழ்வரலாற்றில் காவிய நாயகனென மனங்குளிர்ந்தேன்
கவிஞர் கண்ணதாசன் நினைவு நாளுக்காய்
என்மன வரியினை அர்ப்பணித்தேன்!...

கீத்தா பரமானந்தன் - யேர்மனி

# செய்தித்துளிகள்... (உலகம்)

உலகம் முழுவதும் 12 கோடி பேர் பட்டினியால் இறக்கும் அபாயம்உலகம் முழுவதும் சுமார் 12 கோடி பேர் பட்டினியால் இறக்கும் தறுவாயில் உள்ளதாக, உலக உணவு அமைப்பின் செயல் இயக்குநர் டேவிட் பியாஸ்லி கூறியுள்ளார்

ஐ.நா. சபையின் நிலையான வளர்ச்சி தீர்வுகள் பிணையம் வெளியிட்டுள்ள 2018 இல் உலகில் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளது பின்லாந்து, நோர்வே, டென்மார்க், ஐஸ்லாந்து, சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து, கனடா, நியூசிலாந்து, சுவீடன், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் தான், மகிழ்ச்சியான முதல் 10 நாடுகளின் பட்டியலில் இடம்பிடித்துள்ளன. கடந்த ஆண்டு 120 ஆவது இடத்தில் இருந்த இலங்கை இம்முறை நான்கு இடங்கள் முன்னேறி 116 ஆவது இடத்தில் உள்ளது. இதில் இந்தியாவை விட இலங்கை முன்னேற்றகரமான நிலையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் 6 இலட்சம் குழந்தைகள் பிறந்த 28 நாட்களுக்குள் உயிரிழந்து விடுவதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது. உலக அளவில் குழந்தைகள் இறப்பு விகிதம் குறித்து ஐநாவின் குழந்தைகள் நல அமைப்பான யூனிசெப் ஆய்வு ஒன்றை நடத்தியுள்ளது. இந்த ஆய்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன

2018 ஆம் ஆண்டின் தொடக்க நாளான ஜனவரி 1ஆம் தேதி உலகம் முழுவதும் 3,86,000 குழந்தைகள் பிறந்துள்ளதாகவும், இதில் இந்தியாவிலேயே அதிக குழந்தைகள் பிறந்திருக்கிறது என்றும் குழந்தைகள் நல அமைப்பான யுனிசெஃப் நிறுவனம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தங்கமோ தங்கம்! அண்மையில் வெளியான ஒரு தகவலின்படி, பிரித்தானியாவின் தலைநகர் லண்டனில் மட்டும் 7,500 மெட்ரிக் தொன் (ஒரு மெட்ரிக் தொன் என்பது 1000 கிலோகிராம்) நிறையுள்ள தங்கம் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. தங்கத்தைச் சேமித்து வைத்துள்ள ஏனைய சில நாடுகளின் விபரம் மெட்ரிக் தொன்னில் பின்வருமாறு: அமெரிக்கா 8,133, ஜேர்மனி 3,364, இத்தாலி 2,457, சீனா 1,842 சர்வதேச நாணய நிதியம் - 2,451.

# செய்தித்துளிகள்...... (இலங்கை)

இலங்கையின் முதலாவது உள்ளூர் விமானம் நிலையம் மட்டக்களப்பில் திறந்துவைக்கப்பட்டது. விமானப்படையின் கட்டுப்பாட்டில் கடந்த 25 ஆண்டுகளாக இருந்த மட்டக்களப்பு விமான நிலையம், சிவில் விமானப் போக்குவரத்துக்காக திறந்துவைக்கப்பட்டது.

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் 2017 ஆம் ஆண்டில் 14 ஆயிரத்து 514 பேர் போதைக்கு அடிமையாகியுள்ளனர் என்று வன்னி பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

டெங்கு நோயாளர்கள் அதிகமுள்ள மாவட்டமாக மட்டக்களப்பு அறிவிப்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த ஆண்டு 1260 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் இலங்கையில் சனத்தொகையின் அடிப்படையில் டெங்கு நோயாளர்கள் அதிகமுள்ள முதலாவது மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் இனங்காணப்பட்டுள்ளதாகவும் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.கிரிசுதன் தெரிவித்தார்

நடப்பு ஆண்டின் முதல் மூன்று மாதத்திற்குள் 8 ஆயிரத்திற்கு அதிகமான காச நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். நாட்டில் சுமார் 14 ஆயிரம் பேர் வரையில் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தேசிய காச நோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது

இலங்கையில் 490 ஆவது பொலிஸ்நிலையம் கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் 13-03-2018திறந்து வைக்கப்பட்டது. வடமாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரொசான் பெர்னாண்டோ, கிளிநொச்சி முல்லைத்தீவுக்கான பிரதிப்பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்ன மற்றும் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் கணேசநாதன் ஆகியோர் இணைந்து நிலையத்தைத் திறந்து வைத்தனர்.

உலகின் முதல் 50 துறைமுகங்களில் இலங்கை கொழும்பு துறைமுகம் 23 ஆம் இடத்தினை வகிக்கின்றது.அதேபோல் கடந்த ஆண்டில் மாத்திரம் 6.1 மில்லியன் வருவாய் பெறப்பட்டுள்ளது என துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அலுவல்கள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

# சிரி... சிரி.. சிரிப்பு!..........

1-பிச்சைக்காரன்:- ஐயா..அம்மா... எதாவது தர்மம் செய்யுங்கோ.......
வீட்டுக்காரன்:- சில்லறை இல்லையே கிறடிர்காட்தான் (Credit Card) இருக்குது.
பிச்சைக்காரன்:- அப்ப ஏதாவது ஒரு கிறடிற் காட்டைத் தருமம் பண்ணுங்கோ சாமி...

2-ராணி:- பள்ளிகளில் செல்போனுக்கு தடை விதித்திருப்பது மகிழ்ச்சியா?...
அதிர்ச்சியா?...
மலர்:- பெற்றோருக்கு மகிழ்ச்சி...பிள்ளைகளுக்கு அதிர்ச்சி...

3-மகன்:- அப்பா..அப்பா...இங்க ஓடிவாருங்கோ..
அப்பா:- ஏனடா கத்துகிறாய்..
மகன்:- இங்க வாங்கப்பா..இங்கு வந்து பாருங்கப்பா..அம்மா வைச்ச குழம்பை குடித்துவிட்டு மீன் எல்லாம் செத்துக் கிடக்குது சட்டிக்குள்..

4-ஒருவர்:- இந்தியாவில் 2 பிரச்சனைகள் உண்டு. தெரியுமா ஒன்று வெயில்
மற்றவர்:-2வது என்ன பிரச்சனை.
ஒருவர்:- அது ஜெயில் (Jail)

5-குமார்:- என்ன நம்மட ஆள் அப்பளத்தை முள்ளுக்கரண்டியால வெட்டிச் சாப்பிடுகிறார்..
கண்ணன்:- அவர் வெளிநாட்டில் பிறந்தவராம்....

6-ராதா:- என்ன கண்மணி வெள்ளைக்காரப் பிள்ளை அம்மா என்று சொல்ல எங்கட பிள்ளைகள் மம்மி என்று சொல்லுதுகள்..
கண்மணி:-மம் என்றும் முற்றி என்றும்தான் சொல்லுதுகள். அம்மா என்றஅழகான வார்த்தையை அழித்துக் கொண்டிருக்கிறார்கள் உலகின் மூத்த குடிகள்...

திருமதி ஜெயா நடேசன்
யேர்மனி.

# இந்துவின் பக்கம்....

தற்கால ஊடகங்களான சமூக வலைத் தளங்களில் கடல்போலவே தகவல்கள் மற்றும் அறிவியல் விடையங்கள் கொட்டிக்கிடப்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த விடையங்களை எமது வாசகர்கள் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற நல் நோக்கில் அவற்றை திருமதி இந்து அவர்கள் திரட்டித் தருகின்றார். நீங்களும் படித்துப் பாருங்கள்...

தமிழகத்தின் 2 வட்டார மொழிகள் உட்பட இந்தியாவின் தொன்மையான 42 மொழிகள் அழிவின் விளிம்பில் உள்ளதாக ஒரு அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. இந்தியாவில் 22 முக்கிய மொழிகள் மட்டுமின்றி, 100-க்கும் அதிகமான வட்டார மொழிகளும் பரவலாக பேசப்பட்டு வருகிறது. இந்த 100 மொழிகளில் 42 வட்டார மொழிகளை 10 ஆயிரத்துக்கும் குறைவான மக்கள் மட்டும்தான் பேசுகின்றனர். இந்த 42 மொழிகளும் அழிவின் விளிம்பில் இருப்பதாக உள்துறை அமைச்சகம் மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

அந்தமான் நிக்கோபர் தீவுகளில் 11 மொழிகள்
மணிப்பூர் பழங்குடிகளின் 7 மொழிகள்
இமாச்சலப்பிரதேசத்தில் 4 மொழிகள்
ஒடிசாவில் 3 மொழிகள்
கர்நாடகாவில் 2 மொழிகள்
தமிழகத்தில் 2 மொழிகள் இந்த பட்டியலில் இடம்பெற்றுள்ளன. இந்த வட்டார மொழிகளுக்கு எழுத்து வடிவம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஒரு இலட்சம் பேர் தமிழகத்தில்

யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த 1 இலட்சம் பேர் இந்தியாவில் இருப்பதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் யாழ்.மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்றில் தெரிவித்துள்ளார். இவர்களில் கூடுதலானோர் பல்வேறு இடங்களிலுள்ள அகதி முகாம்களிலும் ஏனையோர் தனியார் வீடுகளிலும் சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக வசித்துவருகிறார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

# தமிழின் சிறப்பு

ஹிந்தியை தாய்மொழியாக கொண்டவர்கள். . . தங்களது பெயரில் ஹிந்தி எனும் வார்த்தையை இணைத்துக்கொள்ள முன்வரவில்லை. முடியவும் முடியாது. கன்னடா------முடியாது. தெலுங்கு----- முடியாது. மலையாளம்------முடியாது. ஏனைய மொழிகள்----முடியாது. ஏனென்றால் மற்ற மொழிகள் யாவும் மொழியாக மட்டுமே வரையறுக்கப்பட்டது. ஆனால் . . . தமிழில்.....

தமிழ்,
தமிழ்ச்செல்வி,
தமிழ்ச்செல்வன்,
தமிழரசன்,
தமிழ்க்கதிர்,
தமிழ்க்கனல்,
தமிழ்க்கிழான்,
தமிழ்ச்சித்தன்,
தமிழ்மணி,
தமிழ்மாறன்,
தமிழ்முடி,
தமிழ்வென்றி,
தமிழ்அதன்
தமிழ்மல்லன்,
தமிழ்வேலன்,
தமிழ்த்தென்றல்,
தமிழழகன்,
தமிழ்த்தும்பி,
தமிழ்த்தம்பி,
தமிழ்த்தொண்டன்,
தமிழ்த்தேறல்,
தமிழ்மறை,
தமிழ்மறையான்,
தமிழ்நாவன்,
தமிழ்நாடன்,
தமிழ்நேசன்,
தமிழ்நிலவன்,
தமிழ்நேயன்,
தமிழ்ப்பித்தன்,
தமிழ்வண்ணன்,
தமிழ்ப்புனல்,
தமிழ்எழிலன்,
தமிழ்நம்பி,
தமிழ்த்தேவன்,
தமிழ்மகன்,
தமிழ்முதல்வன்,
தமிழ்முகிலன்,
தமிழ் வேந்தன்,
தமிழ் கொடி.

## பரம்பரை

பரம்பரை பரம்பரையாக என்று சொல்வதன் பொருள் நாம் - முதல் தலைமுறை, தந்தை + தாய் - இரண்டாம் தலைமுறை, பாட்டன் + பாட்டி - மூன்றாம் தலைமுறை, பூட்டன் + பூட்டி - நான்காம் தலைமுறை, ஓட்டன் + ஓட்டி - ஐந்தாம் தலைமுறை, சேயோன் + சேயோள் - ஆறாம் தலைமுறை, பரன் + பரை - ஏழாம் தலைமுறை, ஆக, பரன் + பரை பரம்பரை ஒரு தலைமுறை - சராசரியாக 60 வருடங்கள் என்று கொண்டால், ஏழ தலைமுறை - 480 வருடங்கள்.. ஈரேழ தலைமுறை - 960 வருடங்கள்.. (கிட்டத்தட்ட ஆயிரம் வருடங்கள்)ஆக, பரம்பரை பரம்பரையாக என்று சொல்வதன் பொருள் ஈரேழ, பதினான்கு தலை முறையாக என்று பொருள் வரும். வேறெந்த மொழிகளிலும் இப்படி உறவு முறைகள் இல்லை.. இதுவும் தமிழக்கு ஒரு தனிச் சிறப்பு!..

## நம்மை அறியாமலேயே தினமும் பேசும் சமஸ்கிருத சொற்கள் சில...

அகங்காரம் - செருக்கு
அக்கிரமம் - முறைகேடு
அசலம் - உறுப்பு
அசூயை - பொறாமை
அதிபர் - தலைவர்
அதிருப்தி - மனக்குறை
அதிருஷ்டம்- ஆகூழ், தற்போது
அத்தியாவசியம் -இன்றியமை யாதது
அநாவசியம் -வேண்டாதது
அநேகம் - பல
அந்தரங்கம்- மறைபொருள்
அபகரி -பறி, கைப்பற்று
அபாயம் -இடர்
அபிப்ராயம் -கருத்து
அபிஷேகம் -திருமுழக்கு
அபூர்வம் -புதுமை
அமிசம் -கூறுபாடு
அயோக்கியன் -நேர்மையற்றவன்
அர்த்தநாரி -உமைபாகன்
அர்த்த புஷ்டியுள்ள -பொருள் செறிந்த
அர்த்தம் -பொருள்
அர்த்த ஜாமம் - நள்ளிரவு
அர்ப்பணம் -படையல்
அலங்காரம் -ஒப்பனை
அலட்சியம் - புறக்கணிப்பு
அவசரமாக - உடனடியாக, விரைவாக
அவஸ்தை - நிலை, தொல்லை
அற்பமான - கீழான, சிறிய
அற்புதம் - புதுமை
அனுபவம் - பட்டறிவு
அனுமதி - இசைவு

ஆச்சரியம் - வியப்பு
ஆக்ஞை - ஆணை, கட்டளை
ஆட்சேபணை - தடை, மறுப்பு
ஆதி - முதல்
ஆபத்து - இடர்
ஆமோதித்தல் - வழிமொழிதல்
ஆயுதம் - கருவி
ஆரம்பம் -தொடக்கம்
ஆராதனை -வழிபாடு
ஆரோக்கியம் - உடல்நலம்
ஆலோசனை - அறிவுரை
ஆனந்தம் - மகிழ்ச்சி

இஷ்டம் - விருப்பம்
இங்கிதம் - இனிமை

ஈன ஜன்மம் - இழிந்த பிறப்பு
ஈனஸ்வரம் - மெலிந்த ஓசை

உக்கிரமான - கடுமையான
உபசாரம் - முகமன் கூறல்
உபயோகம் - பயன்
உதாசீனம் - பொருட்படுத்தாமை
உத்தரவாதம் - பிணை, பொறுப்பு
உத்தரவு - கட்டளை
உல்லாசம் - களிப்பு
உற்சாகம் - ஊக்கம்

ஐ

ஐதீகம் - சடங்கு, நம்பிக்கை

(அடுத்த இதழில் தொடரும்)

# சிந்தனைக்குச்சில!...

1.மூன்று விஷயங்கள் யாருக்காகவும் காத்திருப்பது இல்லை.
நேரம்
இறப்பு
வாடிக்கையளர்கள்

2.மூன்று விஷயங்கள் சகோதர சகோதரிகளையும் விரோதியாக்கும்.
நகை
பணம்
சொத்து

3.மூன்று விஷயங்கள் யாராலும் திருடமுடியாது.
புத்தி
கல்வி
நற்பண்புகள்

4.மூன்று விஷயங்கள் ஞாபகம் வைத்திருப்பது அவசியம்.
உண்மை
கடமை
இறப்பு

5.மூன்று விஷயங்கள் வெளிவந்து திரும்புவதில்லை.
வில்லிலிருந்து அம்பு
வாயிலிருந்து சொல்
உடலிலிருந்து உயிர்

6.மூன்றும் வாழ்க்கையில்ஒரு முறைதான் கிடைக்கும்.
தாய்
தந்தை
இளமை

7. இந்த மூன்று பேர்களுக்கும் மரியாதை கொடு.
தாய்
தந்தை
குரு

## நம்மை உயர்த்தும் ஏழு விஷயங்கள்

1-ஏழ்மையிலும் நேர்மை
2-கோபத்திலும் பொறுமை
3-தோல்வியிலும் விடாமுயற்சி
4-வறுமையிலும் உதவிசெய்யும் மனம்
5-துன்பத்திலும் துணிவு
6-செல்வத்திலும் எளிமை
7-பதவியிலும் பணிவு

வழிகாட்டும் ஏழ விஷயங்கள்
1-சிந்தித்து பேசவேண்டும்
2-உண்மையே பேசவேண்டும்
3-அன்பாக பேசவேண்டும்
4-மெதுவாக பேசவேண்டும்
5-சமயம் அறிந்து பேசவேண்டும்
6-இனிமையாக பேசவேண்டும்
7-பேசாதிருக்க பழக வேண்டும்

கவனிக்க ஏழ விஷயங்கள் :
1-கவனி உன் வார்த்தைகளை
2-கவனி உன் செயல்களை
3-கவனி உன் எண்ணங்களை
4-கவனி உன் நடத்தையை
5-கவனி உன் இதயத்தை
6-கவனி உன் முதுகை
7-கவனி உன் வாழ்வை

# கவிஞர் கண்ணதாசன்.... (கௌசி-யேர்மனி)

நாட்டிலுள்ள விஷத்தையெல்லாம் நான் குடிக்க வைத்துவிட்டான்
- கண்ணதாசன் வரிகள் -

ஜூன் 24 அன்று கண்ணதாசன் நினைவுநாள். உலகத் தமிழர்களின் வாயில் முணுமுணுக்கும் காதல், தத்துவம், தாலாட்டுப் பாடல்களின் கவித்துவத்தால் மனித மனங்களை அடிமைப்படுத்தியவர். அதுமட்டுமல்ல பல மனித மனங்களின் சோகத்திற்கும், மகிழ்ச்சிக்கும், நித்திரைக்கும் தேடும் வரிகளுக்குச் சொந்தக்காரன். பழைய தமிழ் இலக்கியங்களின் கற்பனைகளையும் அழகு தமிழ் சொற்களையும் கலந்து தன் கற்பனை என்னும் தேனூற்றி அற்புதமான பாடல்களை யாத்தளித்து, சேரமான் காதலி என்னும் நாவலுக்காக சாகித்திய அகடமி விருது பெற்ற எழுத்தாளர்.

இவரது குடும்பம் பெரிது. 3 திருமணம்.15 வாரிசுகள். பிறந்தது ஓரிடம் வளர்ந்தது ஓரிடம். காரைக்குடியைச் சேர்ந்த பழனியப்பச் செட்டியார்,இவரை வளர்ப்பதற்காக இவருடைய தாய்தந்தைக்கு 7000 ரூபாய் பணம் கொடுத்து வாங்கினார். ஆரம்பப் பெயர் முத்தையா என்றும், அதன் பின் வளர்ப்புத் தந்தையிட்ட பெயர் நாராயணன் என்றும் மாற்றப்பட்டது. இன்று கண்ணதாசன் என்னும் பெயர் உலகறிந்த பெயராக நின்று நிலைக்கின்றது. திரையுலகின் மறக்கவொண்ணாத நாயகனாய் திரைக்கதை வசனம், பாடல்கள் எழுதியது மட்டுமல்ல நடிகனாகவும் விளங்கியிருக் கின்றார். இவரது பராசக்தி, கறுப்புப்பணம், சூரியகாந்தி, இரத்தத்திலகம் ஆகிய படங்களில் நடித்திருக்கின்றார். 16 வயதில் வீட்டைவிட்டு வெளியேறி சென்னைக்கு வந்தார். பல இன்னல்களையும் சோகங்களையும் சுமந்தார். திருமகள் பத்திரிகையில் பூரூப் திருத்துனராக வேலைகேட்டு வந்து பத்திரிகை ஆசிரியராகஅமர்த்தப்பட்டார். பின் திரைஒலி,சண்டமாருதம்,தென்றல் திரை ஆகிய பத்திரிகையில் பணியாற்றினார். அனைத்துப் பத்திரிகைகளிலும் கதைகள்,கட்டு ரைகள்,கவிதைகள்,நாடகங்கள் எழுதியதனால்,இவரதுஇலக்கிய ஆளுமையைஉலகம் அறிந்துகொண்டது. அதன் பின் தான் திரைப்படங்களுக்குப் பாடல்கள் எழுதத் தொடங்கினார். இவரது முதல் கதை கிரகலட்சுமி என்னும் பத்திரிகையில் "நிலாவொளியிலே" என்னும் பெயரிலே வெளிவந்தது. அதிலிருந்து தீவிரமாக எழுதத் தொடங்கினார்.

காப்பியங்கள், கவிதை நூல்கள், சிற்றிலக்கியங்கள், கவிதை நாடகங்கள், மொழிபெயர்ப்பு நூல்கள், புதினங்கள்,சிறுகதைகள், வாழ்க்கைச் சரித்திரங்கள், கட்டுரைகள், சமயநூல்கள், நாடகங்கள், உரைநூல்கள் போன்ற வடிவங்களில் தமிழ் இலக்கிய உலகில் வலம் வந்துள்ளார். சுமார் 5000 க்கும் அதிகமான பாடல்களை திரைப்படங்களுக்கு எழுதியுள்ளார்.

கன்னியின் காதல் என்ற திரைப்படத்திற்கு எழுதிய "கலங்காதிரு மனமே உன் கனவெல்லாம் நனவாகும் ஒரு தினமே" என்னும் பாடலே இவர் திரைப்படத்துறைக்குள் பிரவேசித்த முதல் அறிமுகப் பாடல். அடுத்தடுத்து முயன்றால் பலன் கிடைக்கும் என்னும் தத்துவப்பாடலாக இது அமைந்திருந்தது. மூன்றாம்பிறையில் வந்த "கண்ணே கலைமானே" என்னும் உறங்கச் செய்யும் பாடலே இவரது இறுதிப் பாடலாக அமைந்தது. அவர் உறங்க அவர் பாடிய பாடலாயும் அமைந்திருந்தது. இடையில் வந்த பாடல்களுக்கும் கவிதைகளுக்கும் நான் சக்தியைப் பெற்றதே கம்பராமாயணப் பாடல்கள் தான் என்று தன் வாயாலேயே கூறியிருக்கின்றார். "காலமெனும் ஆழியிலும், காற்று மழை ஊழியிலும் சாகாது கம்பனவன் பாட்டு. அவன் தலைமுறைக்கு எழுதி வைத்த சீட்டு" என்று கம்பருக்கு அவர் பாடிய பாடல்கள் கண்ணதாசனுக்கும் பொருந்துவதாக இருக்கின்றது.

பாடல்களால் பணம் குவிந்த பணத்தை திரைப்படம் தயாரித்து அழித்தார். சேமிப்புப் பழக்கமில்லாத கண்ணதாசன் "பிர்லாவைப் போல சம்பாதித்தேன். ஊதாரியைப் போல செலவழித்தேன். பல நேரங்களில் பிச்சைக்காரன் போல ஏங்கி நின்ற வாழ்க்கைதான் எனக்கு வாய்த்திருக்கின்றது என்று தனது கட்டுரை ஒன்றில் எழுதியிருக்கின்றார். சந்தர்ப்பத்திற்கேற்ப பாடல்கள் எழுதுவதில் திறமையானவர். பணக்கஸ்டத்தில் சகோரர்கள் உதவி செய்ய மறுத்த போது "அண்ணன் என்னடா தம்பி என்னடா அவசரமான உலகத்திலே" என்னும் பாடலை எழுதினார். விஸ்வநாதன் அவர்கள் நெஞ்சிலோர் ஆலயம் படத்திற்காகப் பாடல் எழுத வரும்படி கண்ணதாசனை அழைத்துக் காத்திருந்த போது அவர் வரவில்லை என்ற காரணத்தால்,கோபப்பட்ட விஸ்வநாதன் அவர்கள் "இனிமேல் கண்ணதாசனிடம் பாடல்கள் கேட்கப் போவதில்லை" என்று கூறியதை அறிந்த கண்ணதாசன் "சொன்னது நீதானா சொல் சொல் என்னுயிரே" என்னும் பாடலை எழுதிக் கொண்டு போய்க் கொடுத்தார்.

மனவாசம், வனவாசம், எனது வசந்த காலங்கள், எனது சுயசரிதம் என்னும் ஆகிய 4 புத்தகங்களும் ஒருவன் எவ்வாறு வாழக்கூடாது என்பதற்காக தன் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டிய புத்தகங்களாகும். அவர் தன்னுடைய பல பாடல் வரிகளில் தன்

வாழ்க்கையையே படம் பிடித்துக் காட்டியுள்ளார். "ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு. ஒரு கோலமயில் என் துணையிருப்பு" இறப்பதற்கு முன்பே தனக்குத்தானே எழுதிய இரங்கற்பாவில்"ஏற்றிய செந்தீயே நீ எரிவதிலும் அவன் பாட்டை எழுந்து பாடு" என்று இறுதி வரிகளை எழுதியுள்ளார்.

இவர் கற்பனையில் வரைந்த பாடல்களுக்குச் சில எடுத்துக்காட்டுக்கள்
காதல் பாடல்
"பாலோடு பழம் யாவும் உனக்காக வேண்டும்
பாவை, உன் முகம் பார்த்துப் பசியாற வேண்டும்
மனதாலும் நினைவாலும் தாயாக வேண்டும் - நானாக வேண்டும்
மடிமீதில் விளையாடும் சேயாக வேண்டும் நீயாக வேண்டும்"
"கம்பன் கண்ட சீதை உங்தன் தாயல்லவா
காளிதாசன் சகுந்தலை உன் சேயல்லவா
அம்பிகாபதி அணைத்த அமராபதி!.. மங்கை அமராபதி
சென்ற பின்பு பாவலர்க்கு நீயேகதி!..என்றும் நீயேகதி"
தாலாட்டுப்பாடல்
"காலமிது காலமிது கண்ணுறங்கு மகளே
காலமிதை தவற விட்டால் தூக்கமில்லை மகளே
எண்ணிரண்டு வயது வந்தால் கண்ணுறக்கம் இல்லையடி
ஈரேழு மொழிகளுடன் போராடச் சொல்லுவதே தீராத தொல்லையடி"
சோகப்பாடல்
"உன் கண்ணில் நீர் வழிந்தால் என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி
என் கண்ணில் பாவையன்றோ கண்ணம்மா என் உன்னதன்றோ"
"வானிலுள்ள தேவர்களை வாழ வைக்க விஷம் குடித்தான்
நாட்டிலுள்ள விஷத்தையெல்லாம் நான் குடிக்க விட்டுவிட்டான்"
தத்துவப்பாடல்
"ஆசை கோபம் களவு கொள்பவன் பேசத் தெரிந்த மிருகம்
அன்பு நன்றி கருணை கொண்டவன் மனித வடிவில் தெய்வம்"
"படித்ததினால் அறிவு பெற்றோர் ஆயிரம் உண்டு
பாடம் படிக்காத மேதைகளும் பாரினுள் உண்டு"
"வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்
வாசல் தோறும் வேதனை இருக்கும்
வந்த துன்பம் எது என்றாலும்" வாடி நின்றால் ஓடுவதில்லை"

இவ்வாறு காலத்தால் அழியாத பல திரையிசைப் பாடல்களைத் தந்த கவிஞர் கண்ணதாசன் அவர்கள் மறைந்தும் மறையாது பல உள்ளங்களில் மறக்க முடியாது இன்றும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்.

# சுடுக்கோ புதிர்ப்போட்டி முடிவு - 3

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | 4 | 3 | 5 | 2 | 7 | 9 | 6 |
| 3 | 7 | 5 | 6 | 4 | 9 | 2 | 1 | 8 |
| 2 | 9 | 6 | 8 | 1 | 7 | 5 | 4 | 3 |
| 4 | 3 | 8 | 5 | 2 | 1 | 9 | 6 | 7 |
| 5 | 6 | 1 | 7 | 9 | 8 | 4 | 3 | 2 |
| 9 | 2 | 7 | 4 | 3 | 6 | 8 | 5 | 1 |
| 7 | 1 | 9 | 2 | 6 | 5 | 3 | 8 | 4 |
| 8 | 5 | 3 | 1 | 7 | 4 | 6 | 2 | 9 |
| 6 | 4 | 2 | 9 | 8 | 3 | 1 | 7 | 5 |

# சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு-92

| | | | |
|---|---|---|---|
| பா | ர | தி | யா |
| த | ண் | க | ளை |
| க | த் | தி | ளை |
| ம் | ட | ட் | ப |

# குறுக்கெழுத்துப்போட்டி முடிவு - 153

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தொ | ழி | லா | ள | ர் | சி | ன் |
| ல் | சி | கா | லை | ட் | ள | வ |
| கா | ங் | கே | ச | ன் | து | றை |
| ப் | கி | கே | கை | ர் | ய | இ |
| பி | ம | ல் | லி | ல் | வி | த் |
| ய | ன | ம | ல் | ட் | ர | தா |
| ம் | ம் | ஊ | ம | ஒ | ல் | லி |

# Fifa World cup 2018

## SCHEDULE • FIXTURES • TIMETABLE

# WALL (

Design by : fifafoc

**GROUP A** Russia | Saudi Arabia | Egypt | Uruguay

| | | |
|---|---|---|
| MATCH-1<br>Russia Vs Saudi Arabia<br>14 June 2018, 4pm<br>Luzhniki Stadium, Moscow | MATCH-2<br>Egypt Vs Uruguay<br>15 June 2018, 1pm<br>Central Stadium, Yekaterinburg | MATCH-17<br>Russia Vs Egypt<br>19 June 2018, 7pm<br>Krestovsky Stadium, Saint Petersburg |
| MATCH-18<br>Uruguay Vs Saudi Arabia<br>20 June 2018, 4pm<br>Rostov Arena, Rostov-on-Don | MATCH-33<br>Uruguay Vs Russia<br>25 June 2018, 3pm<br>Cosmos Arena, Samara | MATCH-34<br>Saudi Arabia Vs Egypt<br>25 June 2018, 3pm<br>Volgograd Arena, Volgograd |

Watch Live Match @ https://fifafootballworldcup.live

**GROUP B** Portugal | Spain | Morocco | Iran

| | | |
|---|---|---|
| MATCH-4<br>Morocco Vs Iran<br>15 June 2018, 4pm<br>Krestovsky Stadium, Saint Petersburg | MATCH-3<br>Portugal Vs Spain<br>15 June 2018, 7pm<br>Fisht Olympic Stadium, Sochi | MATCH-19<br>Portugal Vs Morocco<br>20 June 2018, 1pm<br>Luzhniki Stadium, Moscow |
| MATCH-20<br>Iran Vs Spain<br>20 June 2018, 7pm<br>Kazan Arena, Kazan | MATCH-35<br>Iran Vs Portugal<br>25 June 2018, 7pm<br>Mordovia Arena, Saransk | MATCH-36<br>Spain Vs Morocco<br>25 June 2018, 3pm<br>Kaliningrad Stadium, Kaliningrad |

Watch Live Match @ https://fifafootballworldcup.live

**GROUP C** France | Australia | Peru | Denmark

| | | |
|---|---|---|
| MATCH-5<br>France Vs Australia<br>16 June 2018, 11am<br>Kazan Arena, Kazan | MATCH-6<br>Peru Vs Denmark<br>16 June 2018, 5pm<br>Mordovia Arena, Saransk | MATCH-21<br>France Vs Peru<br>21 June 2018, 1pm<br>Central Stadium, Yekaterinburg |
| MATCH-22<br>Denmark Vs Australia<br>21 June 2018, 4pm<br>Cosmos Arena, Samara | MATCH-37<br>Denmark Vs France<br>26 June 2018, 3pm<br>Luzhniki Stadium, Moscow | MATCH-38<br>Australia Vs Peru<br>26 June 2018, 3pm<br>Fisht Olympic Stadium, Sochi |

Watch Live Match @ https://fifafootballworldcup.live

**GROUP D** Argentina | Iceland | Croatia | Nigeria

| | | |
|---|---|---|
| MATCH-7<br>Argentina Vs Iceland<br>16 June 2018, 2pm<br>Otkrytiye Arena, Moscow | MATCH-8<br>Croatia Vs Nigeria<br>16 June 2018, 8pm<br>Kaliningrad Stadium, Kaliningrad | MATCH-23<br>Argentina Vs Croatia<br>21 June 2018, 7pm<br>Nizhny Novgorod Stadium, Nizhny Novgorod |
| MATCH-24<br>Nigeria Vs Iceland<br>22 June 2018, 4pm<br>Volgograd Arena, Volgograd | MATCH-39<br>Nigeria Vs Argentina<br>26 June 2018, 7pm<br>Krestovsky Stadium, Saint Petersburg | MATCH-40<br>Iceland Vs Croatia<br>26 June 2018, 7pm<br>Rostov Arena, Rostov-on-Don |

## ROUND OF 16

Watch Live @

**MATCH-49** 30 June 2018, 7pm
Winners Group A Vs Runners-up Group B
Fisht Olympic Stadium, Sochi

**MATCH-51** 1 July 2018, 3pm
Winners Group B Vs Runners-up Group A
Luzhniki Stadium, Moscow

**MATCH-53** 2 July 2018, 3pm
Winners Group E Vs Runners-up Group F
Cosmos Arena, Samara

**MATCH-55** 3 July 2018, 3pm
Winners Group F Vs Runners-up Group E
Krestovsky Stadium, Saint Petersburg

## QUARTER FINALS

Watch @

**MATCH-57** 6 July 2018, 3pm
Winners Match 49 Vs Winners Match 50
Nizhny Novgorod Stadium, Nizhny Novgorod

**MATCH-59** 7 July 2018, 7pm
Winners Match 51 Vs Winners Match 52
Fisht Olympic Stadium, Sochi

## SEMI FINALS

Watch Live @ h

**MATCH-61** 10 July 2018, 7pm
Winners Match 57 Vs Winners Match 58
Krestovsky Stadium, Saint Petersburg

## 3rd PLACE PLAY OFF

14 Ju

Losers Match 61 Vs
Krestovsky Stadium,

## THE FINAL

15 July 2018, 4p

Winners Match 61 Vs
Luzhniki Stad

# CHART

tballworldcup.live

# Fifa World cup 2018

## SCHEDULE • FIXTURES • TIMETABLE

https://fifafootballworldcup.live

**MATCH-50** 30 June 2018, 3pm
Winners Group C Vs Runners-up Group D
Kazan Arena, Kazan

**MATCH-52** 1 July 2018, 7pm
Winners Group D Vs Runners-up Group C
Nizhny Novgorod Stadium, Nizhny Novgorod

**MATCH-54** 2 July 2018, 7pm
Winners Group G Vs Runners-up Group H
Rostov Arena, Rostov-on-Don

**MATCH-56** 3 July 2018, 7pm
Winners Group H Vs Runners-up Group G
Otkrytiye Arena, Moscow

https://fifafootballworldcup.live

**MATCH-58** 6 July 2018, 7pm
Winners Match 53 Vs Winners Match 54
Kazan Arena, Kazan

**MATCH-60** 7 July 2018, 3pm
Winners Match 55 Vs Winners Match 56
Cosmos Arena, Samara

ttps://fifafootballworldcup.live

**MATCH-62** 11 July 2018, 7pm
Winners Match 59 Vs Winners Match 60
Luzhniki Stadium, Moscow

ly 2018, 3pm
Losers Match 62
Saint Petersburg

m

Winners Match 62
ium, Moscow

**GROUP E** Brazil, Switzerland, Costa Rica, Serbia

| | | |
|---|---|---|
| MATCH-10<br>Costa Rica Vs Serbia<br>17 June 2018, 1pm<br>Cosmos Arena, Samara | MATCH-9<br>Brazil Vs Switzerland<br>17 June 2018, 7pm<br>Rostov Arena, Rostov-on-Don | MATCH-25<br>Brazil Vs Costa Rica<br>22 June 2018, 1pm<br>Krestovsky Stadium, Saint Petersburg |
| MATCH-26<br>Serbia Vs Switzerland<br>22 June 2018, 7pm<br>Kaliningrad Stadium, Kaliningrad | MATCH-41<br>Serbia Vs Brazil<br>27 June 2018, 7pm<br>Otkrytiye Arena, Moscow | MATCH-42<br>Switzerland Vs Costa Rica<br>27 June 2018, 7pm<br>Nizhny Novgorod Stadium, Nizhny Novgorod |

Watch Live Match @ https://fifafootballworldcup.live

**GROUP F** Germany, Mexico, Sweden, S Korea

| | | |
|---|---|---|
| MATCH-11<br>Germany Vs Mexico<br>17 June 2018, 4pm<br>Luzhniki Stadium, Moscow | MATCH-12<br>Sweden Vs S Korea<br>18 June 2018, 1pm<br>Nizhny Novgorod Stadium, Nizhny Novgorod | MATCH-27<br>Germany Vs Sweden<br>23 June 2018, 4pm<br>Fisht Olympic Stadium, Sochi |
| MATCH-28<br>S Korea Vs Mexico<br>23 June 2018, 7pm<br>Rostov Arena, Rostov-on-Don | MATCH-43<br>S Korea Vs Germany<br>27 June 2018, 3pm<br>Kazan Arena, Kazan | MATCH-44<br>Mexico Vs Sweden<br>27 June 2018, 3pm<br>Central Stadium, Yekaterinburg |

Watch Live Match @ https://fifafootballworldcup.live

**GROUP G** Belgium, Panama, Tunisia, England

| | | |
|---|---|---|
| MATCH-13<br>Belgium Vs Panama<br>18 June 2018, 4pm<br>Fisht Olympic Stadium, Sochi | MATCH-14<br>Tunisia Vs England<br>18 June 2018, 7pm<br>Volgograd Arena, Volgograd | MATCH-29<br>Belgium Vs Tunisia<br>23 June 2018, 1pm<br>Otkrytiye Arena, Moscow |
| MATCH-30<br>England Vs Panama<br>24 June 2018, 1pm<br>Nizhny Novgorod Stadium, Nizhny Novgorod | MATCH-45<br>England Vs Belgium<br>28 June 2018, 7pm<br>Kaliningrad Stadium, Kaliningrad | MATCH-46<br>Panama Vs Tunisia<br>28 June 2018, 7pm<br>Mordovia Arena, Saransk |

Watch Live Match @ https://fifafootballworldcup.live

**GROUP H** Poland, Senegal, Colombia, Japan

| | | |
|---|---|---|
| MATCH-15<br>Poland Vs Senegal<br>19 June 2018, 1pm<br>Otkrytiye Arena, Moscow | MATCH-16<br>Colombia Vs Japan<br>19 June 2018, 4pm<br>Mordovia Arena, Saransk | MATCH-32<br>Japan Vs Senegal<br>24 June 2018, 4pm<br>Central Stadium, Yekaterinburg |
| MATCH-31<br>Poland Vs Colombia<br>24 June 2018, 7pm<br>Kazan Arena, Kazan | MATCH-47<br>Japan Vs Poland<br>28 June 2018, 3pm<br>Volgograd Arena, Volgograd | MATCH-48<br>Senegal Vs Colombia<br>28 June 2018, 3pm<br>Cosmos Arena, Samara |

FIFA WORLD CUP

RUSSIA 2018

# FIFA Football World Cup
# உலககிண்ண உதைபந்தாட்டப்போட்டி-2018

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை நடைபெறும் உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டி இம்முறை ரஷ்ஷியாவின் பல நகரங்களில் நடைபெறவுள்ளது. இப்போட்டியானது 21வது போட்டியாகும். இறுதியாக 2014ம் ஆண்டில் பிறேசிலில் நடைபெற்றது. இதில் யேர்மனி இந்த வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது. இப்போட்டிபற்றிய சிறுகுறிப்பை இங்கே காணலாம்.

(1)-14-06-2018 தொடக்கம் 15-07-2018 வரையிலான ஒருமாதகாலம் இப்போட்டி நடைபெறும்.

(2)-5 கண்டங்களிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட 32 நாடுகள் இதில் பங்குகொள்கின்றன.

-ஐரோப்பாவிலிருந்து - 14 நாடுகள்

-ஆசியா அவுஸ்திலேயா நாடுகளிலிருந்து - 05 ”

| | | |
|---|---|---|
| -ஆபிரிக்கா கண்ட நாடுகளிலிருந்து | - 5 | நாடுகள் |
| -மத்திய வட அமெரிக்க நாடுகளிலிருந்து | - 3 | ” |
| -தென்னமெரிக்க நாடுகளிலிருந்து | - 5 | ” |
| மொத்தம் | - 32 | ” |

(3)-மொத்தம் 12 நகரங்களில் போட்டிகள் நடைபெறும். தலைநகர் மொஸ்கோவில்தான் முதல் போட்டியும் இறுதிப்போட்டியும் இடம்பெறும். இந்த விளையாட்டரங்குதான் மிகப்பெரியதாகும் இங்கு 81.000 பேர் கண்டுகளிக்கக்கூடியவகையில் அரங்கு அமைக்கப்பட்டுள்ளது. அரங்குகளும் பார்வையாளர் எண்ணிக்கையும்..

| | | | |
|---|---|---|---|
| A-Moscow | - 81.000 பேர் | G-Rostov | - 45.000 பேர் |
| B-Saint Peterburg | - 68.134 “ | H-Samara | - 44.918 “ |
| C-Sochi | - 47.659 “ | I - Nizhny | - 44.889 “ |
| D-Volgograd | - 45.568 “ | J- Saransk | - 44.442 “ |
| E-Kazan | - 45.379 “ | K- Yekaterin | - 35.696 “ |
| F-Spartak | - 45.360 “ | L- Kalingrad | - 35.212 “ |

(4) மொத்தம் 32 நாடுகளையும் 8 குறூப்பாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு குழுவிலும் 4 நாடுகள் தெரிவுப்போட்டியில் கலந்து கொள்ளும்.

(5) மொத்தமாக 400 மில்லியன் US டொலர்கள் பரிசுப்பணமாக வழங்கப்படும்...வெற்றிபெறும் நாட்டுக்கான...

| | | | |
|---|---|---|---|
| 1வது பரிசு | - 38 | மில்லியன் | டொலர் |
| 2வது ” | - 28 | ” | ” |
| 3வது ” | - 24 | ” | ” |
| 4வது ” | - 22 | ” | ” |
| 5 தொடக்கம் 8வரை(4x16) | - 64 | ” | ” |
| 9 தொடக்கம் 16வரை(8x12) | - 96 | ” | ” |
| 17 தொடக்கம் 32வரை(16X8) | - 128 | ” | ” |

(6) 1930ம் ஆண்டுதான் முறைப்படி இந்த உதைபந்தாட்டப்போட்டி ஆரம்பிக்கப்பட்டது. 80 வருடங்களைக் காணும் இதன் முதலாவது போட்டி உருகுவே நாட்டில்தான் நடைபெற்றது. உருகுவேநாடுதான் முதலாவது உலகக் கிண்ணத்தைப் பெற்றது. இறுதியாக 2014ல் பிறேசிலில் நடைபெற்ற போட்டியில் யேர்மனி வெற்றி பெற்றது. அடுத்த போட்டி 2022 ல் அரபு நாடான கட்டார் நாட்டில் நடைபெறும்.

(7) 60 ஆண்டுகளில் முதல் முறையாக உலகக்கோப்பை கால்பந்து போட்டிக்கு தகுதி பெறாத இத்தாலி 1958ம் ஆண்டுக்கு பிறகு இத்தாலி அணி உலக கோப்பை போட்டிக்கு தகுதி பெறாமல் போனது இதுவே முதல்முறையாகும். 60 ஆண்டுகளுக்கு பிறகு உலக கோப்பை போட்டியில் விளையாடும் வாய்ப்பை பறிகொடுத்து இருக்கிறது.

(8) இதுவரை நடைபெற்ற போட்டிகளின் விபரம்...

| ஆண்டு | நடைபெற்றநாடு | வெற்றிபெற்றநாடு |
|---|---|---|
| 1930 | உருகுவே | உருகுவே |
| 1934 | இத்தாலி | இத்தாலி |
| 1938 | பிரான்ஸ் | இத்தாலி |
| 1942 | 2 வது உலகப்போர் | .................. |
| 1946 | நடைபெறவில்லை | .................. |
| 1950 | பிறேசில் | உருகுவே |
| 1954 | சுவீஸ்லாந்து | யேர்மனி |
| 1958 | சுவீடன் | பிறேசில் |
| 1962 | சில்லே | பிறேசில் |
| 1966 | இங்கிலாந்து | இங்கிலாந்து |
| 1970 | மெக்ஸிக்கோ | பிறேசில் |
| 1974 | யேர்மனி | யேர்மனி |
| 1978 | ஆஜர்ன்தீனா | ஆஜர்ன்தீனா |
| 1982 | ஸ்பெயின் | இத்தாலி |
| 1986 | மெக்ஸிக்கோ | ஆஜர்ன்தீனா |
| 1990 | இத்தாலி | யேர்மனி |
| 1994 | அமெரிக்கா | பிறேசில் |
| 1998 | பிரான்ஸ் | பிரான்ஸ் |
| 2002 | தெ.கொரியா + யப்பான் | பிறேசில் |
| 2006 | யேர்மனி | இத்தாலி |
| 2010 | தென்னாபிரிக்கா | ஸ்பெயின் |
| 2014 | பிறேசில் | யேர்மனி |
| 2018 | ரஷ்ஷியா | ?............ |
| 2022 | கட்டார் | ?............ |

(9) ஆகக்கூடுதலாக இந்த வெற்றிக் கிண்ணத்தைப் பெற்ற நாடுகள்..
பிறேசில் - 5 தடவைகள்
யேர்மனி - 4 "
இத்தாலி- 4 "

(10) உதைபந்தாட்டத்தில் பெரிய ஜாம்பவானாகத் திகழ்ந்த இத்தாலி தகுதி இழந்து இம்முறை தெரிவுசெய்யப்படவில்லை.

# இப்படியும் நடக்குது இங்க!....

-மதவடி மயிலர்-



வணக்கம்!..வணக்கம்!... நான்தான் மதவடி மயிலன்... மீண்டும் வந்திருக்கிறன். என்ன எல்லாரும் சுகம்தானே. சுகமாய் இருப்பீர்களென்றுதான் நம்புகிறன் .....இல்லைப் பாருங்கோ பங்குனி மாதத்தில ஐரோப்பா மட்டுமல்ல உலகம் முழுவதும் ஒரு காய்ச்சல் வந்து சனங்களைப் படாத பாடுபடுத்திப் போட்டுது பாருங்கோ.. இந்த மயிலனையும் இந்தக் காய்ச்சல் விட்டுவிடவில்லை. அப்போ யாரைச் சுகம் விசாரித்தாலும் ஏதோ நலமாய் இருக்கிறம்.. ஆனால்.. காய்ச்சல்...காய்சல்... என்று வாட்டி எடுத்துப்போட்டுது என்று பதில்தான் கூறினார்கள். இது இங்க இப்படி இருக்க நம்மட ஊர்களிலும் கடும் வெப்பம் தாங்கமுடியாமல் இரவிலும்கூடச் சனம் நித்திரை கொள்ளமுடியாமல் ஓடித்திரிந்து பெரும்பாடுதான் பாருங்கோவன்....

வெளிநாடுகளிலிருந்து இந்தமுறை ஈஸ்டர் பெருநாளுக்கு ஊருக்குப் போனவையும் வெய்யில் தாங்கமுடியாமல் எருமைமாடுகள் தண்ணிக்க கிடந்ததுபோல பலமணி நேரம் குளத்திலும் கடலிலும் கிடந்தவை பலர் கண்டியளோ. இன்னும் பல பெருங்குடி மக்கள் இப்ப பனங்கள்ளுச் சீசன் என்றபடியால் இங்குள்ள பியர் குடிவகைமாதிரி நல்லா மூக்குமுட்ட குடித்துப் பிரண்டு நிலைதடுமாறியும் நின்றனராம். குடித்துச்சூட்டைத் தணித்தால் பறவாயில்லை அங்குள்ளவர் களுக்கும் அட்வைஸ் பண்ணி அவர்களையும் குடியுங்கோ!... குடியுங்கோ எனக்குடித்துப் பிரண்டுகூத்தாடி மகிழ்ந்தவையும்.

கனபேர் கண்டியளோ. ஆகா என்ன ஒற்றுமை. என்ன தானதர்மக் காரியம்?.....

சரி..சரி.. இப்போ ஐரோப்பாவிலையும் குளிர் தணிந்து கொஞ்சம் கொஞ்சமாக வெய்யிலும் தலைகாட்டத் தொடங்கிவிட்டது. பலர் சந்தோசப்பட்டு அரைகுறை உடுப்புக்களுடன் ஓடித்திரிந்தாலும் இன்னும்பலருக்குக் கவலைதான். ஏனென்று உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை...... அதாவது வெய்யில் தொடங்கப் பலருக்கு அலர்ஜி என்று சொல்லும் ஒவ்வாமை வருத்தமும் தொடங்கிச் சிலகாலம் பலரை ஆட்டிப்படைத்துப் போடும் பாருங்கோ.. கண்கடி, மூக்குக்கடி, தொண்டைக்கடி, தோல்க்கடி, தலையிடி என எல்லா "டி" களும் வந்துவிடும் கண்டியளோ. அதுவும் வயது வித்தியாசம் இல்லாமல் வந்து சிறிது காலம் பெரும் துன்பம்தான்.

இந்த மயிலன் இந்த மாதம் இன்னொரு வவிசயத்தை உங்களோடு அலசப் போகிறான். நன்றாயிருந்தால் ரசியுங்கோ..மற்றவர்களோடு பகிருங்கோ..அளவானைவை தொப்பியைப் போடுங்கோ.. அல்லது தொப்பியைக் கழட்டுங்கோ.. ஆனால் இந்த மயிலனை திட்டித் தீத்துப்போடாதையுங்கோ.. இன்று உலகம்போறபோக்கைப்பார்த்தால் அதிசயப்படத் தேவையில்லை அந்தளவுக்கு விஞ்ஞான கணனி தொழில்நுட்ப வளர்ச்சி மலையளவு உயர்ந்துவிட்டது

இந்த நூற்றாண்டின் ஒப்பற்ற சாதனைகளில் கணனித்தொழில் நுட்பங்கள் முதலிடம் வகிக்கின்றமை உங்களுக்குத் தெரியும்தானே. அதுவும் இந்தக் கைத்தொலைபேசி இருக்குது பாருங்கோ.. உலகம் சுருங்கி உள்ளங்கைக்குள் வந்த மாற்றத்தை எப்படிச் சொல்ல..ஐந்து வயதுக் குழந்தை முதல் நூறு வயதுக்காரர்வரை இன்று இதை வைத்திராதவர்கள் இல்லை என்றே கூறலாம் பாருங்கோ.. அந்த அளவுக்குத் தொடர்புச் சாதனங்கள் உலகை ஆட்டிப் படைக்கின்றன. என்ற அப்பனே இது எங்கபோய் முடியப்போகுது. தலை சுற்றுகிறது...

இன்று யாரைப் பார்த்தாலும் கையில் எது இல்லாவிட்டாலும் இது இருக்கும். ஏன்சிலர் இரண்டு மூன்றும் வைத்ருக்கிறார்கள். பலர் இன்று இது இல்லாவிடில் தலைவெடித்துச் செத்துப்போவார்கள் என்ற நிலையே வந்துவிட்டது. சிலரைப் பார்த்தால் இரண்டு மூன்றை வைத்துக்கொண்டு விலாசம் காட்டுபவர்களும் பலர். வேண்டாத வீண் வம்புகளில் ஈடுபட்டு அடி,

தடி, கொலை, கொள்ளை, கற்பழிப்பு என இந்தக் கான்போனால் வந்த வினையாகவல்லோ மாறிவிட்டது. இந்த உலகம் பாருங்கோ இப்ப ஒரு ரெயிலிலோ பஸ்சிலோ காரிலோ வானிலோ ஏறிப்பாருங்கோ பலருடைய காதுகளில் வயர் மாட்டப்பட்டு, ஆடலும் பாடலுமாக ஒலி, ஒளி கேட்டுப் பார்த்து மகிழ்பவர்கள் ஒருபுறம். அதையே வைத்துக்கொண்டு கிண்டிக்கிண்டி தனிமையில் இருந்து சிரித்து... பைத்தியக்காரர்கள் போல்தான் வாழ்கை ஓடாவிட்டாலும் வாகனங்கள் ஓடிக்கொண்டெ இருக்கும் பாருங்கோ...

இன்னும் பலர் இப்படி வண்டிகளில் பிரயாணம் செய்பவர்களைப் பார்த்தால் கைத்தொலைபேசியில் முகம்புதைத்து முத்தெடுப்பார்கள். அருகில் இருப்பவர்கள் யார்?.. எவர்?..என்று தெரியாமல் அப்படியே கைத்தொலைபேசியுடன் சங்கமமாகி இறங்க வேண்டிய இடத்தைத் தவறவிட்டுவிட்டு, ரிக்கட் பரிசோதகரிடம் மாட்டித் தத்தளித்துத் தண்டப்பணம் செலுத்தியவர்களையும் இந்த மயிலன் கண்டு சிரித்திருக்கிறான்.

இதுமட்டுமல்ல..வரும் வயோதிபர்களுக்கு இடங்கொடுக்காமல் குழந்தைகளுடன் வருபவர்களுக்கு இடம்கொடுக்காமல் இந்தக் கைத்தொலைபேசியில் மூழ்கிப் பயணிக்கும் பலரையும் கண்டு கவலைப்பட்டவன்தான் இந்த மயிலன். இதனால் மயிலனுக்குக் கடும் கோபம்தான். ஒரு ஐடியாவும் வந்தது. பாம்பு அல்லது பல்லி, கொடுக்கன், பூச்சிகளை எப்போதும் கொண்டு திரியவேணும் போல கிடக்குது. இப்படிப்பட்டவர்களைக் கண்டால் அதுகளை வெளியில விட்டால் தெரியும் அல்லோல கல்லோலப்பட்டுக் கதறி அடித்துக்கொண்டு ஓடுவார்கள். அப்பதான் இவர்கள் விழிப்பாக இருப்பார்கள். நம்மட நாடு என்றால் ஒருக்கா விட்டுப்பார்க்கலாம் என்று ஆசைதான். ஆனால் இங்க விடமுடியுமோ என்னைப்பிடித்து உள்ளுக்க போட்டு கம்பி எண்ணவல்லோ வைத்திடுவாங்கள்.

இன்னும் பல இளசுகளைப் பார்த்தால் இரண்டு மூன்று வைத்துக் கொண்டு மாறி...மாறி இருபத்திநான்குமணி நேரமும் அலட்டலும் அறுவையும்தான். தான் ஒரு VIP மாதிரிச் சிலர், பெரிய தொழிலதிபர்கள் மாதிரி ஒரு பந்தா காட்டி ஏமாற்றிப் பிழைக்கும் கூட்டம் என்றுதான் சொல்ல வேண்டும். இவர்களைப் பெற்று வளர்த்ததுகள் அங்க ஊரில கோவில்களில் கிடந்து பிச்சை எடுத்து வாழ, இங்க

மகனோ மகளோ கோவில்களில் அன்னதானம் கொடுத்துப் பசிதீர்த்த கதையல்லோ....இந்த வாரிசுகளை நினைக்க இந்த மயிலனுக்குத் தலையைக் கொண்டுபோய் எங்க முட்டி மோதலாம் என அலைகிறான் கண்டியளோ!...

இதில் ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். ஒரு இளந்தமிழர் விலையுயர்ந்த மூன்று கைத்தொலைபேசிகளையும் கார், வீடு, ஆடம்பரம் என வாழ்க்கை. இவர் தமிழ் கூட்டம் அல்லது விழாக்களென்றால் இந்த மூன்று தொலைபேசிகளுடன் மாறி மாறிக் கதைப்பதுதான் வழக்கம். அந்தக் கூட்டத்திலோ விழாவிலோ நடப்பதைப்பற்றி கவலைப்படுவதோ கிடையாது. ஏதோ பெரிய "பிஸ்னஸ்மான்" மாதிரி வண்டியும் தொந்தியுமாக கழுத்தில தாலிக்கொடிமாதிரிச் சங்கிலியும் போட்டுக்கொண்டு தனது உருவத்துக்கு யாரும் நல்ல வடிவான பெட்டைகள் சிக்குப்படமாட்டார்களா என்று தம்பி அலைந்து திரியும்.

போதாக்குறைக்கு நாலு ஐந்து இவரைப்போல இளசுகளும் பாதுகாப்புப்படைபோல ஒரு தாதா போல சுற்றித்திரிவதுதான் இவர்களின் வேலையாகிவிட்டது. இதற்கும் மேல இவர்களின் வேலை என்னென்று பார்த்தால் தண்ணியடிக்கிறதும், சுத்துமாத்து, ஆட்கடத்தல் எனத்தொழில் ஓகோ என்றுதான் ஓடிக்கொண்டிருக்கும் கண்டியளோ..

இந்தத்தாதா வட்டி, சீட்டு எனத்தொடங்கிச் சுத்துமாத்து, ஏமாத்து, ஆட்கடத்தல், தண்ணியடி இதனால் தம்பிக்குத் தலைக்கு மேல கடன். இதனால் இவர் கைத்தொலைபேசியை இரவில் எடுப்பதில்லையாம். மூக்குமுட்டத் தண்ணியடித்து பொரியல் கரியலோடு அளவுக்கு அதிகமாக உண்டுவிட்டுக் கிடந்தவர்தான்.......நாலு ஐந்து நாளாகக் காணவில்லை. அவன் எங்கேயாவது வெளிநாடு சென்றுவிட்டான் என்று பலரும் நினைத்துக் கொண்டனர்.

ஊரில் பெற்றதாய் இறந்த செய்தியையும் நல்லடக்கம் செய்யப்பட்ட செய்தியையும் இவனுக்குத் தெரியப்படுத்தலாம் என்று இந்த அருமைப் புத்திரனுக்குத் தெரிவிக்க அவரோடு தண்ணியடிக்கும் ஒரு நாதாரி இவனைத் தேடி இவனின் வீட்டுக்கு நான்கு நாட்களின்பின் போனான். அவனின் வீட்டைச் சென்றடைந்தபோதுதான் அங்க பொலிஸ்காரர் நிற்பதைக் கண்டு இவன் எங்கேயோ மாட்டுப்பட்டுப் போனான் என்று எண்ணினான்.

அங்கு கிட்டப்போய் கூடி நின்றவர்களிடம் விசாரித்தான். விசயம் என்ன வென்று பார்த்தால் இந்தத் தமிழ் VIP இறந்து நான்கு நாட்களாம். உடல் மணம் எடுத்து பக்கத்துவீட்டு யேர்மன்காரன் பொலிசுக்கு அறிவித்து உடலம் மீட்கப்பட்டதாம். தாயும் மகனும் ஒருநாள் வித்தியாசத்தில் இறந்திருக் கிறார்கள் என்னும் போது மயிலனுக்குக் கவலைதான். ஆனால் இந்தப் பரதேசியை நினைத்தால் மயிலனுக்குக் கடும் கோபமும்தான்...

பாருங்கோவன் இவனைப் போல பல VIPகள் வெளிநாட்டில் நாலந்து ரெலிபோனுடன் உலாவரும் காட்சிகளைக் கோடைகாலங்களில் நடைபெற விருக்கும் தமிழ்க்கோவில் திருவிழாக்களில் இன்னும் பலபேரைக் காணலாம். இந்த நாதாரிகள் செய்யும் வேலையைப் பாருங்கோவன். உடலை வருத்தி உழைத்து முன்னேற எத்தனையோ வழிகள் இங்கு உண்டு. ஆனால் இதுகள் சொகுசு வாழ்வு, மற்றவர்களை ஏமாற்றிப் பிழைப்பு, சோம்பேறி வாழ்வு, அடம்பர வாழ்வு என ஈடுபடுத்தி தாமும் அழிந்து மற்றவர்களையும் அழிக்கும் செயலிலேயே ஈடுபடுகிறார்களே.... இது தேவைதானா!..
நாட்டில எத்தனை பிரச்சனை, எத்தனைபேர் கஞ்சி தண்ணிகுடிக்க முடியாமல் ஒரு வேளை உணவுக்கே வழியில்லாமல் அலைகிறார்கள். இருக்க இருப்பிடமில்லாமல் அலைகிறார்கள், சிறைகளில் நீண்டநாட்களாக வாடுகிறார்கள். பாடசாலை செல்லமுடியாமல் எத்தனை ஆயிரம் பிஞ்சுகள் இருக்கிறார்கள். இப்படியே அடுக்கிக்கொண்டு போவான் இந்த மயிலன்.

ஆனால் இதுகள் எல்லாவற்றையும் சொல்லி உங்களிடம் புகழ் எடுக்க விரும்பவில்லை. ஆனால் குறைகளைச் சொல்ல வேண்டிய நேரத்தில் இந்த மயிலன் சொல்லியே தீருவான். இது மயிலனின் குணமும் அதுதான். இவைகள் எல்லாவற்றையும் பார்க்கும்போது சந்தணம் மெத்தினால் எங்கே தடவு என்பார்கள்!... இதுதான் ஞாபகத்திற்கு வருகின்றதே!.. ஆகவே ”மனிதன் வசதிகளைப் பயன்படுத்தித் தானும் முன்னேறி மற்றவர்களையும் முன்னேற்றமடையச் செய்ய வேண்டும்” இதுதான் நல்ல முன்னேற்றம் என்று கூறிக்கொண்டு இப்போதைக்குப் போட்டுவாறன்...அப்ப வரட்டே!... மீண்டும் வருவான் இந்த மயிலன்!...

## So viel Rente gibt es ab Juli mehr


| Rente in € | West | | Ost | |
|---|---|---|---|---|
| bisher | Rente ab 1. Juli | Renten-plus | Rente ab 1. Juli | Renten-plus |
| 500 | 516.10 | 16,10 | 516,35 | 16,35 |
| 600 | 619,32 | 19,32 | 620,22 | 20,22 |
| 700 | 722,54 | 22,54 | 723,59 | 23,59 |
| 800 | 825,76 | 25,76 | 826,96 | 26,96 |
| 900 | 928,98 | 28,98 | 930,33 | 30,33 |
| 1000 | 1032,20 | 32,20 | 1033,70 | 33,70 |
| 1100 | 1135,42 | 35,42 | 1137,07 | 37,07 |
| 1200 | 1238,64 | 38,64 | 1240,44 | 40,44 |
| 1300 | 1341,86 | 41,86 | 1343,81 | 43,81 |
| 1400 | 1445,08 | 45.08 | 1447.18 | 47.18 |
| 1500 | 1548,30 | 48,30 | 1550,55 | 50,55 |
| 1600 | 1651,52 | 51.52 | 1653,92 | 53.92 |
| 1700 | 1754.74 | 54,74 | 1757.29 | 57,29 |
| 1800 | 1857,96 | 57,96 | 1860,66 | 60,66 |
| 1900 | 1961,18 | 61,18 | 1964,03 | 64,03 |
| 2000 | 2064,40 | 64,40 | 2067,40 | 67,40 |
| 2100 | 2167,62 | 67,62 | 2170,77 | 70,77 |
| 2200 | 2270,84 | 70,84 | 2274,14 | 74,14 |
| 2300 | 2374,06 | 74,06 | 2377,51 | 77,51 |
| 2400 | 2477,28 | 77,28 | 2480,88 | 80,88 |
| 2500 | 2580,50 | 80,50 | 2584,25 | 84,25 |

முதியவர்களுக்கு இனிப்பான செய்தி!...

தற்போது யேர்மனியில் ஓய்வூதியம் பெறும் முதயவர்களே..எதிர்வரும் 01-07-2018 முதல் உங்களுக்குக் கிடைக்கும் ஒய்வூதியத்தை அரசு கூட்டி வழங்கவுள்ளது. எனவே இச்செய்தியை ஏனைய நட்புக்களுக்குத் தெரியப்படுத்தவும். அதாவது தற்போது ஒருவர் 500-00 யூரோ ஓய்வூதியம் பெறுவாரானால் 01.07.18 தொடக்கம் 516-10 யூரோ பெறுவார்.

# சுவாமி விபுலாநந்தர்.......

## தமிழுலகுக்குப் பெருமை தேடித்தந்த விபுலாநந்த அடிகளார்......



பெயர்:-மயில்வாகனம் சின்னத்தம்பி - மதம்:-இந்து
பிறப்பு:-மார்ச்சு 27, 1892 - காரைதீவு, இலங்கை
இறப்பு:-யூலை 19, 1947(அகவை 55) மட்டக்களப்பு, இலங்கை
கல்லறை:- சிவானந்த வித்தியாலயத்தில் இவரது நினைவுச் சின்னம் (சமாதி) உள்ளது.
மற்ற பெயர்கள்:-விபுலாநந்த அடிகள்
கல்வி:-இளமானி (அறிவியல், இலண்டன் பல்கலைக்கழகம்)
பணி:- பேராசிரியர்
பணியகம்:- இலங்கைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அறியப்படுவது:- தமிழிசை ஆய்வாளர், பண்டிதர், நூலாசிரியர், இந்து மறுமலர்ச்சியாளர். சுவாமி விபுலாநந்தர் (மார்ச் 27, 1892 - ஜூலை 19, 1947) கிழக்கிலங்கையில் பிறந்து தமிழ் மொழி வளர்ச்சிக்கு பெரும் தொண்டாற்றியவர். இலக்கியம், சமயம், தத்துவஞானம், அறிவியல், இசை முதலிய பல துறைகளில் கற்றுத் தேர்ந்தவர்.

பிறப்பு:-

சுவாமி விபுலாநந்தரின் இயற்பெயர் மயில்வாகனன் ஆகும். இவர் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் காரைதீவு என்னும் ஊரில் 1892 ஆம் ஆண்டு, மார்ச்சு மாதம், 27 ஆம் தேதி சாமித்தம்பி, கண்ணம்மா தம்பதிகளுக்குப் பிறந்தார்.

கல்வி:-

இவருடைய ஆரம்பக் கல்வி கல்முனை மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலையிலும் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியிலும் இடம்பெற்றது. கேம்பிரிட்ஜ் சீனியர் (Cambridge Senior)சோதனையில் சித்தியடைந்த பின்னர், அவர் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியில் ஆசிரியராகச் சிலகாலம் பணி புரிந்து, அதன் பின் கொழும்பில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்தார். அங்கு விரிவுரையாளராயிருந்த தென்கோவை கந்தையா பிள்ளையிடம் பண்டையத் தமிழ் இலக்கியத்தைக் கற்றார்.
ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் 1912ஆம் ஆண்டு பயிற்றப்பட்ட ஆசிரியர் என்ற சான்றிதழுடன் மீண்டும் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியில் ஆசிரியராக இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்தார். 1915ஆம் ஆண்டு கொழும்பு அரசினர் தொழில்நுட்பக்கல்லூரியில் சேர்ந்து விஞ்ஞானம் பயின்று 1916இல் அறிவியலில் பட்டயத்தையும் பெற்றார். அத்துடன் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய தேர்வில் பங்கேற்று பண்டிதர் பட்டத்தையும் பெற்றார். இலங்கையிலிருந்து இப்பட்டத்தை முதன்முதல் பெற்றவர் சுவாமி விபுலாநந்தரே.

ஆசிரியப் பணி:-

கொழும்பு அரசினர் தொழிநுட்பக் கல்லூரியில் இரசாயன உதவி விரிவுரையாளராக பணியாற்றினார். மயில்வாகனனாரின் விரிவுரைகள் மாணவர் மத்தியில் பெரும் சிறப்பைத் தேடிக் கொடுத்தன. அதனால் 1917ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரிக்கு விஞ்ஞான ஆசிரியராக விரும்பி அழைத்தனர். அதனை பெருவிருப்புடன் ஏற்றுக் கொண்டார். அத்துடன் 1920 ஆம் ஆண்டு லண்டன் பல்கலைக்கழகம் நடத்திய BSc தேர்வில் தோற்றி சித்தியடைந்தார். மயில்வாகனனாரின் மொழிப்புலமையையும் ஆற்றலையும் அறிந்த மானிப்பாய் இந்துக் கல்லூரிமுகாமையாளரும், திருப்புகழ், சிவப்பிரகாசம், சிவஞானசித்தியார் என்பவற்றுக்கு உரை எழுதியவருமான வழக்கறிஞர் திருவிளங்கத்தாரின் வேண்டுகோளுக்கிணங்கி மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

திருக்கோணமலை கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில், 1925ம் ஆண்டிலிருந்து முகாமையாளராகக் கடமையாற்றிய சுவாமி விபுலாநந்தர் அவர்கள் கல்லூரியின் வளர்ச்சியில் தனது செறிவான கவனத்தைச் செலுத்தும் பொருட்டு 1928ல் அதிபர் பதவியையும் ஏற்றுக் கொண்டார்.

தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக ''யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம்" என்ற கழகத்தை அமைத்து தமிழை வளர்க்கலானார். இந்தச் சங்கத்தின் மூலம் பிரவேசப் பண்டிதர், பாலபண்டிதர், பண்டிதர் என மூன்று தேர்வுகளை ஏற்படுத்தினார். மயில்வாகனனாரின் இந்த முயற்சி எத்தனையோ பண்டிதமணிகளை நாட்டிற்கு அளித்துள்ளது.

துறவறம்

மனதை ஈர்த்து வந்த துறவுணர்வு, நாளும் பொழுதும் பெருகி, இராமகிருஷ்ண மிஷனில் சங்கமிக்கத் துடித்துக் கொண்டிருந்தார். ஆசிரியப் பதவியைத் துறந்து 1922 ஆம் ஆண்டில் ராமகிருஷ்ண மிஷனில் இணைந்து சென்னைக்குப் புறப்பட்டார், மயில்வாகனன். சென்னையில் மயிலாப்பூர் மடத்தில் சுவாமி சிவானந்தரினால் பிரபோத சைத்தன்ய பிரிவில் பிரமச்சரிய தீட்சையும், சந்நியாச தீட்சையும் வழங்கப்பட்டன.

இரண்டு வருடங்கள் அங்கு பயின்ற அவர், இராமகிருஷ்ண மிஷன் நடத்திய ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் என்ற தமிழ்ச் சஞ்சிகைக்கும்,வேதாந்த கேசரி (Vedanta Kesari) என்ற ஆங்கில சஞ்சிகைக்கும் ஆசிரியராகவிருந்து பல அரிய கட்டுரைகளை எழுதினார். மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்திய பண்டித பரீட்சையின் பரீட்சார்த்தகராக நியமிக்கப்பட்டார். தமிழ்ச்சங்க வெளியீடான செந்தமிழ் எனும் சஞ்சிகையில் இலக்கியக் கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதி வந்தார். ஷேக்ஸ்பியரின் நாடகங்களை அடிப்படையாகக் கொண்டு அவர் பல திறனாய்வுக் கட்டுரைகளை வெளியிட்டிருக்கிறார். இக்கட்டுரைகள், 'மதங்க சூளாமணி' என்ற தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.1924ஆம் ஆண்டு சித்திரை மாதம் பௌர்ணமி தினத்தில் சுவாமி சிவானந்தரால் சுவாமி விபுலாநந்தர் என்ற துறவறப்பெயர் வழங்கப்பட்டது. அதன் பின்னர், அவர் இலங்கை திரும்பி, இராமகிருஷ்ண மிஷன் மேற்கொள்ளும் கல்விப் பணிகளை ஒருங்கமைத்தார்.



இசைஆராய்ச்சி:-

செட்டி நாட்டரசர் வேண்டுகோளின் படி, சுவாமி விபுலாநந்தர் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1931 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியர் பணியை ஏற்று, பல்கலைக்கழக வரலாற்றில் என்றென்றும் நினைத்து போற்றக்கூடிய தம் தமிழ்த் தொண்டைப் பதிவு செய்தார். அக்காலப் பகுதியில் தான் அவருடைய இசை சம்பந்தமான ஆராய்ச்சி ஆரம்பமாகியது. புராதன தமிழர் இசை பற்றி அவர் ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். 1934 ஆம் ஆண்டில், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பதவியில் இருந்தி விலகி இலங்கை திரும்பிய அடிகளார், இங்கு இராமகிருஷ்ண மிஷன் மேற்கொண்டு வந்த கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டார். இராமகிருஷ்ண மிஷன் இமயமலைப் பகுதியில் உள்ள அல்மோரா(Almorah) என்ற இடத்தில் மாயாவதி ஆசிரமத்தில் இருந்து வெளியிடும் 'பிரபுத்த பாரதம் (Prabuddha Bharatha) என்ற சஞ்சிகையின் ஆசிரியராக 1934 ஆம் ஆண்டில் விபுலாநந்த அடிகள் நியமிக்கப்பட்டார். அப்போது தான், இசைத் தமிழ் பற்றிய முழுமையான ஆய்வு செய்யப் பெற்று, அரிய நூலாகிய "யாழ் நூல்" உருவாக்கம் பெற்றது

1943 ஆம் ஆண்டில், இலங்கையில் பல்கலைக்கழகம் இயங்கத் தொடங்கியபோது தமிழ்த் துறையின் முதலாவது பேராசிரியராக பலரின் வேண்டுகோளிற்கிணங்க பணிபுரிய இணங்கினார். தமிழ் ஆய்வுத்துறை எவ்வழியில் செல்லவேண்டும் என்ற திட்டங்களைச் சுவாமி விபுலாநந்தரே வகுத்தார் என்பது நினைவில் இருக்கத்தக்கது.

யாழ் நூல் அரங்கேற்றம்:-

யாழ் நூல்சுவாமி அவர்களின் தமிழ்த் தொண்டால் தலை சிறந்து விளங்குவது அவருடைய யாழ் நூல் ஆராய்ச்சியாகும். சுவாமி அவர்கள் பதினைந்து ஆண்டு காலம் ஆராய்ந்து கண்டுணர்ந்த யாழ்நூலினைக் கரந்தை தமிழ்ச் சங்கத்தின் ஆதரவுடன் திருக்கொள்ளம்பூதூர் வில்வாரண்யேசுவரர் கோயிலில் திருஞானசம்பந்தரின் சந்நிதானத்தில் இசை விற்பன்னர்கள், கற்றோர்கள், மற்றோர்கள் முன்னிலையில் தேவாரப்பண்களைத் தாமே அமைத்து 1947 ஆம் ஆண்டு ஆனித் திங்களில் அரங்கேற்றினார்.

முதல் நாள் விழாவில் இயற்றமிழ்ப்புலவர்கள், அறிஞர்கள் சூழ்ந்து வர சுவாமி அவர்களை தெற்குக் கோபுர வாயிலின் வழியாக திருக்கோயிலுக்கு அழைத்து வந்தார்கள். சுவாமி அவர்கள் தான் ஆராய்ந்து கண்டுபிடித்த வரைபடத்துடன் விளக்கிய பின்னர், தான் தயாரித்த முளரியாழ், சுருதி வீணை, பாரிசாத வீணை, சதுர்த்தண்டி வீணைகளைத் தாங்கி சிலர் சென்றார்கள். நாச்சியார் முன்னிலையில் சுவாமி இயற்றிய 'நாச்சியார் நான்மணிமாலை' வித்துவான் ஔவை துரைசாமி அவர்களால் படிக்கப்பட்டு அரங்கேறியது. பாராட்டுரைகளுக்குப் பின்னர் சங்கீதபூஷணம் க.பெ. சிவானந்தம் பிள்ளை சுவாமிகளால் கண்டுணர்ந்த யாழ்களை மீட்டி இன்னிசை பொழிய முதல் நாள் விழா இனிதாக நிறைவேறியது.

இரண்டாம் நாள் விழாவில் நாவலர் சோமசுந்தர பாரதியார், 'குமரன்' ஆசிரியர் சொ. முருகப்பா, தமிழ்ப்பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சென்னைப் பல்கலைக்கழக சாம்பமூர்த்தி ஐயர், இசைப் பேராசிரியர் சுவாமிநாத பிள்ளை, கரந்தைக் கவியரசு அ. வேங்கடாசலம் பிள்ளை, அறிஞர் தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார், சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை, சுவாமி சித்பவாநந்தர், மற்றும் பலர் ஆய்வுரை நிகழ்த்தினார்கள். பின்னர் சுவாமி விபுலாநந்தர் யாழ் பற்றிய அரிய தகவல்களை எடுத்துவிளக்கினார். வித்துவான் வெள்ளைவாரணர் யாழ்நூலின் பெருமைகளை எடுத்து விளக்கினார். பின்னர் யாழ்நூல் அரங்கேற்றப்பட்டது.

1943 ஆம் ஆண்டில், இலங்கையில் பல்கலைக்கழகம் இயங்கத் தொடங்கியபோது தமிழ்த் துறையின் முதலாவது பேராசிரியராக பலரின் வேண்டுகோளிற்கிணங்க பணிபுரிய இணங்கினார். தமிழ் ஆய்வுத்துறை எவ்வழியில் செல்லவேண்டும் என்ற திட்டங்களைச் சுவாமி விபுலாநந்தரே வகுத்தார் என்பது நினைவில் இருக்கத்தக்கது.




மறைவு:-

விபுலாநந்தர் சமாதி

யாழ்நூல் அரங்கேற்றத்துக்கு பின்னர் உடல் பாதிக்கப்பட்ட நிலையில் நாடு திரும்பினார். 1947 ஆம் ஆண்டு ஆடித்திங்கள் 19ஆம் நாள் சனிக்கிழமை இரவு சுவாமி விபுலாநந்தர் இறந்தார். அவரது உடல், அவர் உருவாக்கிய மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தின் முன்னாலுள்ள மரத்தின் கீழ் அமைக்கப்பட்ட கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது. ஈழத்து மக்களுக்கு இவர் ஆற்றிய சேவையினைப் பாராட்டி இலங்கையரசு தேசிய வீரர் வரிசையில் ஒருவராக இவரைச் சேர்த்துள்ளது. இத்துடன் நாட்டில் உள்ள பாடசாலைகளிடையே கொண்டாடப்படும் அகில இலங்கை தமிழ் மொழி தினம் இவரது மறைவு தினமான அன்றே கொண்டாடப்படுகின்றது.

# மேதின வரலாறு...... (உலகத்தொழிலாளர் தினம்)

1806 ஆம் ஆண்டு அமெரிக்காவில் பிலடெல்பியா நகரத்தில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். போராட்டத்தத்திற்கு தலைமை ஏற்றவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து விசாரணை நடைபெற்றபோது நாளொன்றுக்கு 19 முதல் 20 மணி நேரம் வேலை வாங்கப்பட்ட தகவல்கள் வெளியானது. 1820 முதல் 1830 களில் பில்டெல்பியா நகர இயந்திர தொழிலாளர் சங்கம்தான் முதன் மதல் 10 மணி நேர வேலை என்ற கோஷத்தை முன் வைத்தது. அதே நகரில் 1827ல் கட்டிடத் தொழிலாளர்கள் சங்கம் இந்தக் கோரிக்கைக்காக வேலைநிறுத்தத்தை நடத்தியது. இதன் பின்புதான் 10 மணி நேரவேலை என்ற கோரிக்கை அனைத்துத் தரப்பினராலும் பிரதானமாகப் பார்க்கப்பட்டது.

நியூயோர்க் நகரில் ரொட்டித் தொழிலாளர்கள் இதே காலத்தில் சுமார் 20 மணி நேரம் எகிப்திய அடிமைகளைவிடக் கேவலமான முறையில் வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர். 1837ல் வேன்பியுரன் என்பவர் தலைமையிலான அரசாங்கம் 10 மணி நேர வேலைநாள் என்ற அறிவிப்பை வெளியிட்டது. இது போராடிய தொழிலாளர்கள் மத்தியில் புதிய உற்சாகத்தையும் உத்வேகத்தையும் கொடுத்தது. பல தொழிற்சாலைகளில் இக்கோரிகைகை வெற்றியடைய தொழிலாளர்கள் உடனே 8 மணிநேர வேலைக் கோஷத்தை முன் வைத்தனர்.

இந்தக்கோஷத்தால் வளரும் நாடுகளில் போராட்டங்கள் வெடித்தன. ஆஸ்திரேலியா தொழிலாளர்கள் வேலை, ஓய்வு, உறக்கம் என அனைத்திலும் 8 மணி நேரம் என 1858ல் போராடி வெற்றி பெற்றனர். 1884ல் அமெரிக்காவில் உருவான 8 மணி இயக்கம்தான் மே தினம் உருவாகக் காரணமாக அமைந்தது. இதற்கு முன்னரும் 1861 - 1862 காலத்திலும் போராட்டம் உருவெடுத்திருந்தது. 1866ல் கூடிய அமெரிக்கா தேசிய தொழிற்சங்கம் அமெரிக்க முழவதும் 8 மணி நேரவேலை எனத் தீர்மானம் எடுத்தது.

1889ல் பிரானஸ்-பாரிசில் கூடிய மகாநாட்டில் மே 1ம்திகதி உலகத் தொழிலாளர் தினம் என அறிவிக்கப்பட்டது. 1884 தொடக்கம் அமெரிக்காவின் சகல பகுதிகளிலும் இப்போராட்டம்






நடைபெற்றுக் கொண்டிருந்தன. சாலை, ரயில்வே, நகராட்சி, இயந்திரத் தொழிலாளர்களின் போராட்டம் தீவிரமடைந்தது. 1873 களில் அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் விளைவும், வேலையில்லாத் திண்டாட்டமும் மக்களின் துன்பமும் குறைவான வேலைநாட்களுக்கான போராட்டத்திற்கு உந்து சக்தியாக அமைந்தது. 1881ல் 500 வேலைநிறுத்தப் போராட்டங்கள் நடைபெற்றன. 1886ல் 11.562 ஆக உயர்ந்தது. வேலை நிறுத்தத்தின் மையமாக சிக்காக்கோ நகரமும் குறிப்பாக நியூயோர்க், பால்டிமோர், வாஷிங்டன், மில்வாக்கி, சின்சிநாட்டி, செயிண்ட் லூயிஸ், பிட்ஸ்பேர்க், டெட்ராய்ட் ஆகிய நகரங்களில் அதிக அளவில் பங்கேற்றது.

1886 மே 1 தேதியன்று சிக்காக்கோ நகரம் தனது வரலாற்றில் ஏராளமான தொழிலாளர்கள் தங்கள் கருவிகளைக் கீழே வைத்துவிட்டு தெருவுக்கு இறங்கித் தங்களது மாபெரும் வர்க்க ஒற்றுமையை காட்டிய காட்சியை கண்டது. சிக்காக்கோ நகரம் மட்டுமல்ல உலகமே கண்டது. தொழிலாளி வர்க்கத்தின் எதிரிகள் மற்றும் அரசு இயந்திரம் இணைந்து தொழிலாளர்களைக் கைதுசெய்தது. போர்க்குணம் மிக்க தலைவர்களை அழித்தொழிக்கும் முயற்சியில் இறங்கியது.


அமைதியான முறையில் போராட்ட களத்தில் நின்ற தொழிலாளர்களைக் காவல்துறை சுற்றி வளைத்துத் தாக்கியது. அதில் ஏற்பட்ட கலவரத்தையொட்டிப் பல தொழிலாளர்கள் காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டிற்குத் தங்களது உயிரையும் குருதியையும் தந்தனர். தொழிற்சங்கத் தலைவர்கள் பலர் தூக்குக் கயிற்றை முத்தமிட்டனர். அவர்களின் இந்த மகத்தான தியாகமே மே தினத்தைத் தொழிலாளர்களின் உரிமை தினமாக உலகம் முழுவதும் அனுட்டிஷ்த்து வருகின்றது.


# நோயற்ற வாழ்வுக்கு!...

01-வரட்டு இருமலுக்குச் சிறந்தது திராட்சை.
02-முதுகுத்தண்டு வலிக்குப் பப்பாளிப்பழம்.
03-இரத்த அழுத்தம் குறைய எலுமிச்சை.
04-மூளைக்கு வலுவூட்ட வல்லாரை.
05-காது மந்தம் போக்கும் தூதுவளை.
06-மூத்திரக் கடுப்பு இல்லாமல் செய்வது பசலைக்கீரை.
07-பித்த மயக்கம் தீர புளியாரை.
08-உடற்சூடு அகல முருங்கைக்கீரை.
09-நீரழிவு நோய்குத் துளசி இலை.
10-இரத்தத்தைச் சுத்திகரிக்க வெள்ளைப்பூடு.
11-கண்பார்வை அதிகரிக்க கரட், ஏலக்காய், புதினா.
12-கடுமையான ஜலதோசத்திற்கு தேனும் எலுமிச்சையும்.
13-வாழ்நாளை நீடிக்க நெல்லிக்கனி.
14-சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தும் வெந்தயம்.
15-கொழுப்புச் சத்தைக் குறைக்கும் மிளகு.
16-இளைத்த உடல் பெருக்கும் மிளகு.
17-பொடுகைப் போக்க தயிரில் குளி.
18-மூல நோய்க்கு கருணைக் கிழங்கு.
19-இதயம் பலவீனம் போக்க மாதுளை.
20-வெள்ளை வெட்டை தீர அன்னாசி.
21-காதுவலி தீர எலுமிசம் சாறு நாலு துளி.
22-பீனிசம் தலைவலி நீங்க மிளகு தூளுடன் வெல்லம்.
23-நோய் தணிந்து உடல் தேறிவிடப் பொன்னாங்காணி
24-சிறுநீர் கற்களைக் கரைக்கும் வாழைத்தண்டு.
25-மலத்தை இளக்கும் ரோஜா இதழ்கள்.
26-பேதியை நிறுத்தும் மாதுளம் பிஞ்சு.
27-கருப்பை நோய் தீர வாழைப்பூ
28-ஜீரண சக்தியை அதிகரிக்கும் மிளகும் இஞ்சியும்.
29-மூளைக்கு வலுவூட்டுவது பேரீச்சம்பழமும் பாதாம் பருப்பும்.
30-கால் ஆணி குணமாக மருதோன்றி வேர்ப்பட்டையை அரைத்துக் காலில் கட்டவேண்டும்.

# ஜெர்மனியிலிருந்து வெளிவரும் "மண்"சஞ்சிகையில் ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களுக்குக் கௌரவம்!.....

## ("அக்கினிக்குஞ்சு" இணைய சஞ்சிகை அவுஸ்திரேலியா)




அவுஸ்திரேலியா நாட்டிலிருந்து வெளிவரும் "அக்கினிக்குஞ்சு" இணையப்பத்திரிகையில் யேர்மனியிலிருந்து கடந்த 28 வருடங்களாக வெளிவரும் "மண்" கலை இலக்கிய சமூக சஞ்சிகைபற்றிய குறிப்பைப் பதிவு செய்துள்ளனர். இந்த இணையக்குழவினருக்கு நன்றிகள்...

ஆசிரியர் - "மண்"

ஜெர்மனியிலிருந்து நீண்ட காலமாக வெளிவரும் "மண்' சஞ்சிகையின் 186, 187 ஆவது இதழ்களில், ஈழத்தின் மூத்த ஊடகவியலாளர் (அமர்) எஸ்.எம். கோபாலரத்தினம் மற்றும் படைப்பிலக்கியவாதி லெ.முருகபூபதி ஆகியோரின் வாழ்வும் பணிகளையும் சித்திரிக்கும் கட்டுரைகளுடன் அவர்களின் படத்தையும் முகப்பில் பதிவுசெய்துள்ளனர்.

ஈழத்தில் தமிழ்ப்பிரதேசங்களில் போர்க்காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வாழ்வாதார உதவிகளிலும் அக்கறை காண்பிக்கும் "மண்" சஞ்சிகை, போரினால் உடல் ஊனமுற்றவர்கள், நிரந்தரமாக முடமாக்கப்பட்டவர்கள் மற்றும் வாழ்வாதாரம் வேண்டி நிற்பவர்களுக்கு அமைப்பு ரீதியாக உதவி வரும் மண் சஞ்சிகை, காலத்துக்கு காலம் ஈழத்தின் மூத்த கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் பற்றிய கட்டுரைகளையும் வெளியிட்டு, அவர்களின் படங்களையும் முகப்பில் பதிவுசெய்து வருகிறது.

புகலிடத்தில் வளரும் தமிழ்க்குழந்தைகளுக்காகவும் நீண்ட காலமாக வாழும் மூத்த தலைமுறையினருக்காகவும் சிறுவர் இலக்கியம், சிறுகதை, கட்டுரை, விமர்சனம் உட்பட பலதரப்பட்ட, கலை, இலக்கிய விடயங்களையும் வெளியிட்டுவருகிறது. ஈழத்தில் தமிழ்ப்பிரதேசங்களில் கிளிநொச்சி, முல்லைத்தீவு முதலான மாவட்டங்கள் வறுமைக்கோட்டின் கீழிருப்பதாகவும், அதற்கு ஆதாரமாக சனத்தொகை புள்ளிவிபரத்திலிருந்து தகவல்களையும் சுட்டிக்காண்பித்துள்ளது.

அரசும், நாடாளுமன்றிற்கு தெரிவாகி இருக்கும் தமிழ்த்தலைவர்களும், வடமாகாண சபையும், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும், நாடுகடந்த தமிழீழ அரசும், புலம்பெயர் சமூக அமைப்புகளும் இதுவிடயத்தில் கூடுதல் கவனம் எடுக்கவேண்டும் எனவும் ஆசிரியத் தலையங்கத்தில் தெரிவித்துள்ள "மண்" சஞ்சிகையின்186 ஆவது இதழ் மூத்த ஊடகவியலாளர் (அமரர்) எஸ்.எம்.கோபாலரத்தினம்,நெருக்கடியான காலகட்டத்தில் எவ்வாறு துணிவுடன் இதழியல் பணிகளை தொடர்ந்தார் என்பதை சித்திரிக்கும் கட்டுரையையும் வெளியிட்டுள்ளது.

ஜெர்மனியில் வதியும் இளம்தலைமுறையினரின் ஆக்கங்களுக்கும் களம் வழங்கிவரும் "மண்" சஞ்சிகையின் 187 ஆவது இதழில், தற்போது அவுஸ்திரேலியாவில் வதியும் எழுத்தாளரும் ஊடகவியலாளருமான லெ. முருகபூபதியின் எழுத்துலகத்தையும் அவர் மேற்கொண்ட இலக்கியப்பணிகளையும் விபரிக்கும் கட்டுரையையும் வெளியிட்டு , அவரது படத்தையும் குறிப்பிட்ட இதழின் முகப்பில் பதிவுசெய்துள்ளது.

இவ்விதழில் இலங்கையில் போர்க்காலத்தில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒருவருடத்திற்கும் மேலாக நடத்தும் அறப்போராட்டத்தையும் சுட்டிக்காண்பித்து, தேர்தல் காலங்களில் மக்கள் தமது உள்ளத்துணர்வுகளை, அந்த உறவுகளின் கண்ணீரின் சார்பாக வெளிப்படுத்தவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

"பிள்ளை ஒன்றைப்பெற்றதிலிருந்து, முதிய வயதை அடைந்து இறுதியாகச்செல்லும் இடம்வரை தமிழருக்கு கொண்டாட்டத்திற்குக் குறைவே கிடையாது பாருங்கோ" என்ற ரீதியில் "இப்படியும் நடக்குது இங்கே" என்ற அங்கதச்சுவை பத்தியினை மதவடி மயிலர் மண் சஞ்சிகையில் எழுதிவருகிறார்.

புகலிட வாழ்வுக்கோலங்களையும், அதில் படர்ந்திருக்கும் நல்ல அம்சங்களையும் அதேவேளை நீடிக்கும் போலித்தனங்களையும் இந்தத்தொடர் பகிர்ந்துவருகிறது. விழாக்கள், கொண்டாட்டங்களை எளிமையான முறையில், அதாவது இங்கு வாழும் சந்ததிகள் பயன்படும் வண்ணமும் தாயக சந்ததிகளுக்கு உதவும் நோக்கிலும் நடத்துவதில் கவனம் செலுத்துமாறும் மதவடி மயிலர் வேண்டுகோள் விடுக்கிறார்.

பல்சுவை அம்சங்களுடன் இளம், மூத்த தலைமுறையினருக்கு ஏற்றவாறு வெளிவரும் "மண்" சஞ்சிகை Am Windhoevel 18 a- 47249 Duisburg- Germany என்னும் முகவரியிலிருந்து வெளிவருகிறது.

---

**பகிர்வோம்.... ஈழமும் தமிழும்.........**

கல்லடி வேலுப்பிள்ளையுடன் தொடர்புடைய சில விநோதச்செய்திகள் காணப்பெறுகின்றன. அவற்றுள் ஒன்று பின்வருமாறு : வேலுப்பிள்ளை ஒருமுறை தட்டானைப் (பத்தர்) பார்த்து, "பத்தரை வெள்ளியால் செய்ய முடியுமா?'

என்று கேட்டார். பத்தரை ரூபாய் எடையுள்ள வெள்ளியால் செயயும்படி கேட்கின்றார் எனறே தட்டான் நினைத்தான். அதனால் முடியுமென்று சாதித்தான். கல்லடி வேலுப்பிள்ளை முடியாது என்று சொன்னார். கடைசியில், பத்தரை வெள்ளியால் செய்ய முடியுமா?' என்று கேட்டுச் சிரித்தாராம்.

(நன்றி ஞானம் சஞ்சிகை)

# நெல்சன் மண்டேலாவின் மனைவி காலமானார்!



**கணவரின் இலட்சியத்தை கட்டிக்காத்த வீரமங்கை!**

கறுப்பின மக்களின் உரிமைகளுக்காகப் போராடிய தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் முன்னாள் மனைவி வின்னி மண்டேலா 02-04-2018 அன்று காலமானார். தென்னாபிரிக்காவில் உள்ள குலு கிராமத்தில் 08-.07-.1918 பிறந்த நெல்சன் மண்டேலா இளம் வயதில் ஆடு, மாடு மேய்த்துக் கொண்டே பாடசாலையில் படித்தார். போர் புரியும் கலைகளையும் பயின்றார். இவரின் பெயரின் முன்னால் உள்ள "நெல்சன்" இவர் கல்வி கற்ற முதல் பாடசாலையின் ஆசிரியரினால் சூட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

கல்வியறிவைப் பெறுவதில் பெரிதும் நாட்டம் கொண்ட மண்டேலா, லண்டன் மற்றும் தென்னாபிரிக்க பல்கலைக்கழகங்களிலும் பட்டப்படிப்பை மேற்கொண்டார். 1941-ஆம் ஆண்டு ஜோகானஸ்பர்க் சென்று பகுதி நேரத்தில் சட்டக்கல்வி படித்தார். ஒரு தங்கச் சுரங்க பாதுகாப்பு அதிகாரியாகவும், தோட்ட முகவராகவும் பணியாற்றி வந்தார்.

மண்டேலா 1962இ-ல் சிறையில் அடைக்கப்பட்டார். ஏறத்தாழ 27 ஆண்டுகள் சிறையில் இருந்தார். உலக வரலாற்றிலேயே மண்டேலாவை போல இவ்வளவு நீண்ட காலம் சிறையில் வாடிய தலைவர்கள் கிடையாது. வின்னியும் தனது கணவரின் கொள்கைகளுக்காகப் போராடி சிறைவாசம் அனுபவித்தார்.




37 ஆண்டுகாலை தாம்பத்திய வாழ்க்கையில் இரு குழந்தைகளுக்கு தாயாகி, பொது வாழ்க்கையில் கணவருடன் சேர்ந்து பல்வேறு வேதனைகளை அனுபவித்த வின்னி மண்டேலா கருத்து வேறுபாடு காரணமாக நெல்சன் மண்டேலாவிடம் இருந்து கடந்த 1996-ம் ஆண்டில் விவாகரத்து பெற்றார்.

அதன் பின்னர் வெறும் பாராளுமன்ற உறுப்பினராக மட்டுமே அடுத்தடுத்து பதவிவகித்த வின்னி மண்டேலா, சமீபகாலமாக பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்காமல் இருந்து வந்தார். இந்நிலையில், உடல்நலக்குறைவு காரணமாக ஜோகனஸ்பர்க் நகரில் உள்ள நெட்கேர் மில்பார்க் மருத்துவமனையில் வின்னி என்றழைக்கப்படும் நோம்ஸ ாமோ வின்னிபிரெட் மடிக்கிசேலா மண்டேலா தனது 81-வது வயதில் காலமானார்.

தென்னாபிரிக்காவில் இனவெறிக்கு எதிரான பிரசாகரான வின்னி பெரும் பணி புரிந்துள்ளார்.கறுப்பினத்தவர்களின் உரிமைகளுக்காக மூன்று தசாப்தகாலங்களுக்கு மேலாக போராடிய நெல்சன் மண்டேலா, தனது 27 வருட சிறைவாசத்தை முடித்துக்கொண்டு வெளியே வந்தபோது அவருடன் வின்னி மண்டேலா கைகோர்த்து நடந்த புகைப்படம் அப்போது இனவெறிக்கு எதிரான போராட்டத்தின் சின்னமாகத் திகழ்ந்தது.

# மனிகுலத்தை விடுவிக்க வந்த மாமேதை........

## கார்ல்மார்க்ஸ் -பிறந்தநாள் மே5



(05.05.1818 - 14.03.1883)

மார்க்ஸ் எனும் மாபெரும் சிந்தனையாளர் 1818-ஆம் வருடம் மே 5-ஆம் நாள் யேர்மனியில் பிறந்தார். மார்க்ஸ் பிறந்தபோது, ஜெர்மனி முப்பத்து எட்டு சுதேச மன்னர்களின் ஆட்சியின்கீழ் பிரிந்து கிடந்தது. அவை, அன்றைய வியன்னா ஒப்பந்தப்படி, ஜெர்மனி, பிரெஷ்யா என பிரிக்கப்பட்டன. ஜெர்மனியில் இருபது சிற்றரசர்களின் ஆட்சியும், பிரெஷ்யாவில் 18 சிற்றரசர்களின் ஆட்சியும் நீடித்தன. இதில் ரைன் நதி பாயும் ரெயின்லாண்ட் பகுதியில் ரியர் எனும் நகரத்தில்தான் மார்க்ஸ் பிறந்தார். அப்பகுதியில் இரும்பு, நிலக்கரிச் சுரங்கங்கள் இருந்தன. வேளாண்மையும் செழிப்பாக இருந்தது.

அங்குதான், தனது 17-ஆவது வயது வரையில் மார்க்ஸ் தமது படிப்பை பெற்று வந்தார். அது பிரெஞ்சு நாட்டின் எல்லையோரத்தில், லியான்ஸ் மாகாணத்திற்கு அருகில் அமைந்திருந்த பகுதி. அங்கு தொழில் புரட்சியின் விளைவாக அமைந்த தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் சங்கம் அமைத்து, தங்கள் உரிமைகளுக்காகப் போராடி வந்தார்கள்.

அவர்கள் 'உழைத்துப் பிழைப்போம் அல்லது போராடியே மடிவோம்' என்ற முழக்கத்தை எழுப்பினார்கள். அப் போராட்டங்களை கவனித்த ரூசோ, ஹாப்ஸ், வால்டேர் போன்றோர், 'சுதந்திரம் - சமத்துவம் - சகோதரத்துவம்' என்ற முழக்கங்களை எழுப்பினர். அவை ஜெர்மனியிலும் எதிரொலித்தன.

அப்போது போன் பல் கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்த ஹெகல் எனும் சிந்தனையாளர், தர்க்கவியல் மூலம் ஜெர்மானிய தத்துவங்களை ஆய்வு செய்து எழதினார்.

அதில் கற்பனாவாத சோசலிசம் மறுக்கப்பட்டு, பொருள் முதல்வாத கருத்தோட்டம் விளக்கப்பட்டிருந்தது.

ஆனால் தேவனின் சித்தப்படியே மனிதர்களின் சிந்தனையும், செயல்பாடுகளும் அமைந்துள்ளது' என்று எழுதினார். மார்க்ஸ், அப் பல் கலைக்கழகத்தில் மாணவனாகச் சேருவதற்கு பதினைந்து ஆண்டுகட்கு முன்னரே,பல் கலைக் கழகத்திலிருந்து ஹெகல் விலகி விட்டார். ஆனால், அறுபது முதல் எழுபது விழுக்காடு மாணவர்கள் தங்களை ஹெகலியவாதிகள் என்று அழைத்துக் கொண்டனர். மார்க்ஸும் அந்தக் குழுவில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

ஹெகலைப் பின்பற்றிய மாணவர்கள் மென்மைச் சிந்தனையாளர்கள் - தீவிரச் சிந்தனையாளர்கள் என இரு குழுக்களாகப் பிரிந்தனர். அதில், இடது பக்கம் சாய்ந்தார் கார்ல் மார்க்ஸ். இந்த கட்டத்தில், பெர்லின் பல்கலைக்கழகத்திற்கு போய்ச் சேருமாறு மார்க்ஸின் தந்தை பரிந்துரைத்தார். பெர்லின் பல்கலைக்கழகத்தில் சேர்ந்த மார்க்ஸ், சட்டம் மற்றும் மூன்று பிறமொழிகள் ஆகியவற்றுடன் முனைவர் பட்டத்துக்காக ஆய்வு செய்ய கிரேக்க சிந்தனையாளன் எபிகுரஸ்ஸின் சிந்தனையை எடுத்துக் கொண்டார்.

கிரேக்க ஞானியான எபிகுரஸ், கடவுள் மறுப்பாளர். பிரபஞ்சத்தில் காணப்படும் அணுக்களின் சேர்க்கை, மோதுதல் ஆகியவற்றால்தான் உலகம் இயங்கி வருகிறது என்ற கருத்தை வெளியிட்டார். புலுடார்க் எனும் ஆன்மீக சிந்தனை யாளனுடன் நடத்திய விவாதத்தின் போது, மனிதன்தான் கடவுளுக்கு கோயில் கட்டியிருக்கிறான் தன் வடிவத்திலேயே ஒரு கற்சிலையை அல்லது பொற்சிலையை வடித்து, அதற்கொரு பெயரும் இட்டு, கடவுள் என அழைப்பதை நான் கண்டிருக்கிறேன். ஆனால், கடவுள் மனிதனைப் படைத்தார் என்பதை நிறுவிக் காட்ட முடியுமா' எனக் கேட்டவர் எபிகுரஸ்.

இவரது கருத்தை உளறல் என்று ஆன்மிகவாதிகள் முத்திரையிட்டனர்.மார்க்ஸின் ஆய்வுக் கட்டுரையை மதிப்பிட்ட பேராசிரியர்கள், முனைவர் பட்டத்தை மகிழ்ச்சியோடு வழங்கினர். டாக்டர் பட்டம் பெற்ற மார்க்ஸ், விடுமுறையின்போது, தான் காதலித்த ஜென்னி ஜான் பெஸ்ட் பாலனை சந்தித்தார். ஜென்னி, 1814-ஆம் ஆண்டு பிறந்தவர். மார்க்ஸுக்கு நான்கு வயது மூத்தவர். 1843 ஜூன் 19-ஆம் தேதி இவர்களின் திருமணம் பதிவாயிற்று. இந்த இடைப்பட்ட காலத்தில், அவர்கள்

பரிமாறிக் கொண்ட காதல் கடிதங்கள் கவித்துவம் மிக்கதாகவும், வாழ்க்கையைப் பற்றி விவாதிப்பதாகவும் இருந்தன. மார்க்ஸ் ஜென்னிக்கு எழுதிய கடிதத்தில், 'வசதிகளோடு வாழ்ந்து பழகிவிட்ட நீ, என்னோடு வாழும்போது துன்ப துயரங்களை தாங்க வேண்டியிருக்குமே என்பதை நினைத்து வேதனைப்படுகிறேன்' என்று எழுதினார்.

ஜென்னி 'தன் சொந்த வாழ்க்கையைப் பற்றி மட்டும் கவலைப்படுகிறவர்களுக்குத்தான் துன்பங்கள் அதிகரிக்கும். ஆனால் நீங்களோ, மனித குலத்தின் முழு விடுதலைக்காக பாடுபடுவதால் துயரங்களைத் தாங்கும் வலிமை உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. நானும் அதில் பங்கேற்பதால் எனக்கும் துயரங்களைத் தாங்கும் மன உறுதி உண்டு' என்று எழுதினார்.

திருமணமான சில மாதங்களுக்குள் மார்க்ஸை அந்நாட்டு அரசாங்கம் வேட்டையாடத் தொடங்கியது. நாடு கடத்தும் உத்தரவும் வந்தது. அவர் மட்டும் பெல்ஜியத்திற்குப் போய் தங்கினார். அங்கிருந்தபோது, 'கம்யூனிஸ்ட் லீக்' என்ற அமைப்பை உருவாக்கினார். சில முற்போக்காளர்களை இணைத்து ஒரு பத்திரிக்கை தொடங்கத் திட்டமிட்டார். ஆனால் அரசியல் தஞ்சமடைந்திருந்த அகதி என்பதால் நிதிபெற முடியவில்லை. ஆனால், சில சீர்திருத்தவாதிகள் நடத்திவந்த போது பத்திரிக்கைகளில் விமர்சனக் கட்டுரைகள் எழுதிவந்தார். அவை, அரசின் நடவடிக்கைகளை கண்டிப்பதாக இருந்ததால், அங்கிருந்தும் நாடு கடத்தப்பட்டார்.

பிரான்ஸ் நாட்டில் தொழிலாளர்கள் வாழும் பகுதியில் ஒரு சிறிய வீட்டில் குடியேறினார். ஜென்னி மார்க்ஸ், தன் ஆடைகள் சிலவற்றையும், தன் திருமண பரிசுப் பொருள்களையும் விற்றுப் பெற்ற சிறிய தொகையோடு மார்க்ஸிடம் வந்து சேர்ந்தார். சிறிது காலத்தில் கர்ப்பவதியான ஜென்னி, இன்னல்கள் மிகுந்த சூழலில் ஒரு பெண் குழந்தையைப் பெற்றார். அந்தக் குழந்தைக்கு ஜென்னி என்று பெயரிடப்பட்டது. அவர் பிறந்தபோது தொட்டிலும் இல்லை இறந்தபோது புதைக்க பெட்டியும் இல்லை.

அடுத்த மகள் லாராவும், அதேபோன்று வறுமையில் வதங்கி வாழ்ந்து முடிந்தார். மூன்றாமவர் எலியனார் மட்டும்தான் தாய் - தந்தை மறைவுக்குப் பின்னும் வாழ்ந்தவர். ஒவ்வொரு நொடியும் சித்திரவதைக் குள்ளாகவே காலத்தைக் கழித்தவர் மார்க்ஸ். ஈடுபட்டிருந்தார் என்பதுதான் வியப்பிலும் வியப்பாக இருக்கிறது.அவர் இங்கிலாந்தில் தங்கியிருந்தபோது,

இவை அனைத்தையும் மறந்து, ஆழ்ந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார் என்பதுதான் வியப்பிலும் வியப்பாக இருக்கிறது. அவர் மறைந்த போது, அன்றும் இறுதிக் கடமைகளை நிறைவேற்றியவர் ஏங்கல்ஸ் தான். இரங்கல் உரை ஆற்றிய பிரடரிக் ஏங்கல்ஸ், "மார்க்ஸ் சிந்திப்பதை நிறுத்திக் கொண்டார்" என்று கூறினார்.

அவர் மறைந்த பிறகு "மூலதனம்" நூலை வெளியிடுவதிலும் முழுப்பங்காற்றிய ஏங்கல்ஸ், 'கடந்த பல ஆண்டுகளாக ஆய்வில் ஈடுபட்டிருந்த காலங்களில் மார்க்ஸ் புகைத்துச் சாம்பலாகத் தட்டிய சுருட்டுக்களின் விலை அளவிற்குக்கூட, அவர் பலனை எதிர்பார்க்கவில்லை. அவர் எழுதிய நூல்கள் எல்லாம் காணாமல் போய் "உபரி மதிப்புக் கோட்பாடு" என்ற பொருளியல் கோட்பாடு மட்டுமே மிஞ்சியிருந்தாலும் யுகாந்திரங்களுக்கு அவரது அறிவாற்றலைக் காட்ட அது போதுமானதாகும் என்றும் கூறினார். அக்கூற்றை நோபல் பரிசு பெற்ற பொருளியல் வல்லுநர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். இங்கிலாந்து அரசியல் தஞ்சம்' வழங்கியிருந்தாலும், மாதா கோயிலாலும் அரசாலும் புறக்கணிக்கப்பட்டவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில்தான் - லண்டன் ஹைகோர்ட்டில் மார்க்ஸை புதைக்க இடம் ஒதுக்கினர் என்பதும் சோக வரலாறாகும்.

## உலகம் முழுவதும் 12 கோடி பேர் பட்டினியால் இறக்கும் அபாயம்........

உலகம் முழவதும் சுமார் 12 கோடி பேர் பட்டினியால் இறக்கும் தருவாயில் உள்ளதாக, உலக உணவு அமைப்பின் செயல் இயக்குநர் டேவிட் பியாஸ்லி கூறியுள்ளார். 100 ஆண்டுகளுக்கு முன்பு வரை, பல்வேறு உலக நாடுகளைப் பஞ்சம் தாக்கி வந்ததில், போதிய உணவும் நீரும் இல்லாமல் ஏராளமான மக்கள் இறந்து போனதாகவும், ஆனால், தற்போதுள்ள காலகட்டத்தில் இந்த நிலைமை மாறிவிட்டது. ஒவ்வொரு நாடும் வேளாண்மைக்கு முக்கியத்துவம் அளிக்கத் தொடங்கியுள்ளதால் உணவு உற்பத்தி கணிசமாக அதிகரித்து.எந்த நாட்டிலும் பஞ்சம் ஏற்படும் சூழ்நிலை தற்போது இல்லை என்றும் கூறியுள்ள டேவிட் பியாஸ்லி, போர் மற்றும் உள்நாட்டு மோதல்களால் அரசியல் நிலையற்ற சூழல் நிலவிவரும் நாடுகளில் மட்டும், கடுமையான உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்

# அரச குடும்பத் திருமணம்
## Royal Family Wedding



**மணமகன் :- ஹரி** (Princ Herry) **மணமகள்:- மேக்கான்** (Meghan Markle)

**பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் திருமணநாள் அதாவது பிரித்தானிய மகாராணி 2வது எலிசபெத் அவர்களின் பேரனின் திருமண வைபவம் 19.05.2018 சனிக்கிழமை லண்டன் மாநகரில் வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது மணமகன் இளவரசர் ஹரி மணமகள் மேக்கான் இவர்களைப் பற்றியும் இத்திருமணம் பற்றியும் சிறு குறிப்பு ஒன்றைப் பார்ப்போம். ஹரியின் தாயார் அமரர் டயானாவின் திருமணத்துக்குப் பின் இவரது திருமணத்தில்தான் உலகம் பூராகவும் இருந்து பெருந்தொகையான பார்வையாளர்கள் நேரிலும் தொலைக்காட்சிகளிலும் கண்டு களித்ததாகக் கூறப்பட்டுள்ளது.**

**மணமகன் :- ஹரி** (Princ Herry) **பிறந்த திகதி** 15. September 1984
Ausbildung: Royal Military Academy Sandhurst (2005–2006), Eton College (1998–2003), Ludgrove School, Wetherby School
**தந்தை** Charles - **தாய்** Diana - **பேரன்** Prince Philip **பேத்தி** Queen Elisapath
**சகோதரன்** William - **மனைவி** Kate **பிள்ளைகள்** George, Charlotte

**மணமகள்:- மேக்கான்** (Meghan Markle) **பிறப்பு** August 4, 1981
Los Angeles, California, U.S.
**கல்வி - பட்டதாரி தொழில் - நடிகர்**
**தாய் -** Doria Ragland **தந்தை -** Thomas Markle
**சிலகுறிப்புக்கள்:-**
**-இவர்களின் கலியாண நிச்சயதார்த்தம் 27.11.2017 அன்று நடைபெற்றது.**
**-தாயார் டயானாவின் திருமணத்தின் பின்பு இந்தத் திருமண வைபவத்தில்தான் பெருந்தொகையினர் பார்வையிடுவார்கள் எனச்சொல்லப்பட்டது.**
**-இத் திருமணத்திற்குரிய பூக்களின் அலங்காரச் செலவுகளைப் பிரித்தானிய பூக்கம்பனி ஒன்று பொறுப்பேற்றுள்ளது.**
-VIP **என்று கூறப்படும் விசேட விருந்தாளிகள் சுமார் 800 பேர் கலந்துகொள்வார்கள். உலக நாடுகளைச் சேர்ந்த மன்னர்கள், இளவரசர்கள், நாட்டுத் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், விளையாட்டுப் பிரபலங்கள் எனப் பலதரப்பினர் கலந்து கொள்வார்கள்**
**-திருமண விழாவிற்கு வருகைதரும் அனைத்துப் பிரமுகர்களுக்குமான ஆரம்ப குடிவகைச்** (Sekt) **செலவாக சுமார் (1.00.000) ஒரு லட்சம் யூரோ வும் மற்றும் திருமணக் கொண்டாட்டத்தின் குடிவகைச் செலவாக** (Champagner) **(1.55.000) ஒரு லட்சத்து ஐம்பத்தைத்து ஆயிரம் யூரோ செலவுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.**
**-இந்தத் திருமண விழாவின் மொத்தச் செலவு சுமார் 34 மில்லியன் யூரோ எனத்தெரிவந்துள்ளது.**
**-மணமகன் - மணமகள் வாழ்க்கை வரலாறு பற்றிய புத்தகம் ஒன்றும் வெளியிடப்படும் இதன் விலை 15-99 யூரோவாகும்.**
**-மணமகனின் தாயார் இளவரசி டயானா அவர்கள் 36 வயதில் இறந்தார். இந்த மணமகளின்** Meghan **வயதும் 36 ஆகும்.**

Royal Family Wedding Dates

-Queen Elisbeth - Prince Philip - 20-04-1947
**(பிரித்தானிய முடிக்குரிய அரசி)**

-Prince Charles - Diana - 29-07-1981
**(இளவரசர் - இளவரசி)**

-Prince William - Kate - 29-04-2011
**(இளவரசர் - இளவரசி)**

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச் செலவுகளைப்பொறுப்பேற்றுஉதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்துஉதவலாம்.இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு- வவுனியா) - 480-00
02. திருமதி.யஜிந்தா ராஜ்மோகன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு-மட்டக்களப்பு - 480-00
03. செல்வன்.விஷ்ணு,செல்வி.பவுத்ரா.விஜயகௌரிசுவீஸ்லாந்து
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு-கிளிசொச்சி - 480-00
04. செல்வன்.நகுல்.துரையரங்கன் - ஜேர்மன்
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவுதிருகோணமலை -480-00
05. செல்வி.அஜந்தி.அழகராசா - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு- வவுனியா -480-00
06. திருமதி.பராசக்தி.பரமசாமி - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு- வவுனியா - 480-00
07. திருமதி.ரதி.சின்னத்துரை - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா - 480-00
08. திருமதி.பிரிந்தாவனி.தனபாலசுந்தரம் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா - 480-00
09. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா - 480-00
10. செல்வி அனிதா றஞ்சன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - கிளிநொச்சி - 480-00
11.செல்விகள்.வினிஷா.இராஜ்குமார்,தீபா.தர்மராசா-ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- மட்டக்களப்பு -240-00
12. செல்வி.சுகிர்தா தவராஜ் - ஜேர்மனி
((ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- கிளிநொச்சி -200-00
13. செல்வன். சியாந்த எமில் சர்வானந்தன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- வவுனியா - 200-00

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு

ஆரம்ப இருப்பு 01-03-2018(மேலதிகச்செலவு) - 136-20

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

02. செல்வி. அனித்தா றஞ்சன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

03. திருமதி. பராசக்தி. பரமாமி - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

04. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

05.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

06. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

07. செல்வி சுகிர்தா தவராஜ் -Wadgassen + 150-00
(ஆதரவற்றசிறார் ஒருவரின் வருடாந்த
கல்விச்செலவு அன்பளிப்பு)

08. திரு.சிவகுமாரன் சாந்தலிங்கம் - Pforzheim + 20-00

09. செல்வி பவுத்ரா செல்வன் விஷ்ணு விஜயகௌரி
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற
வருடாந்த அன்பளிப்பு) - Swiss + 419-54

10. திருமதி ஜெயா நடேசன்
(பிறந்தநாள் அன்பளிப்பு) - Havixburg + 25-00

--------

\+ 958-34

\+ 958-34

அனுப்பியது:-

சிறீ சண்முகா பெண்கள் இல்லம் திருகோணமலை-480-00
வங்கிக் கட்டணம் - 35-00
\--------
-515-00

வங்கிவரி 01.03.2018 - 31.03.2018 - 10-84
01.04.2018 - 30.04.2018 - 10-84 - 21-68
\--------
-536-68 - 536-68
\--------

30-04-2018 மீதி கையிருப்பு - 421-66
\---------
\---------

## இன்றைய உலகில்........

இன்றைய உலகின் தொழில்நுட்ப வளர்ச்சியில் கைத்தொலைபேசியின் பாவனைதான் உலகில் முதலிடத்தைப் பிடித்துக்கொண்டுள்ளது. மாறிவரும் உலகில் மாற்றங்கள் பல மலையைத் தொட்டு நிற்கின்றன. அந்தளவிற்குக் கணனி உலகம் எங்கேயோ சென்றுவிட்டது. ஆனால் இந்தக் கைத்தொலைபேசிப் பாவனையோ விண்ணையும் மீறி அதன் வளர்ச்சி காணப்படுகின்றது. கடந்த வருடங்களில் அதன் வளர்ச்சிப் போக்கைப் பாருங்கள்.

ஒரு லட்சம் பேருக்கு...

| | | | |
|---|---|---|---|
| 1986 ஆண்டில் | - | 16 | பேர் வைத்திருந்தார்கள் |
| 1990 " | - | 211 | " " |
| 1995 " | - | 1.585 | " " |
| 2000 " | - | 12.075 | " " |
| 2005 " | - | 33.911 | " " |
| 2010 " | - | 76.517 | " " |
| 2017 " | - | 1.01.511 | " " |

Sis .Gladys j.jeyaratnam "Ruth mission"Kilinochchi Sri Lanka.
**ரூத் மிஷன் -சிறுவர் காப்பகம் - ஜெயபுரம் - கிளிநொச்சி**

**கல்விக்கான உதவி கோரல் ஜேசுதாசன் சனுஜா தரம்5. ஜேசுதாசன் சுஜீபா தரம் 2. இவர்களது தந்தை சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார். இவர்கள் மிகவும் படிக்க கூடியவர்கள்.இவர்கள் கல்வி கற்பதற்கு தங்களால் இயன்ற பண உதவியினை செய்து தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.இவர்களது புகைப்படங்கள் இத்துடன் அனுப்பி வைக்கிறேன்.ஏனைய விபரங்களை தபாலில் அனுப்புகிறேன். நன்றி இறைஆசிகள்...**

Sis.Gladys.j.jeyaratnam
**நிர்வாகி.**





# வடகொரிய - தென்கொரியா

ஒரே இனம், ஒரே மொழி, ஒரே மதம் கலாச்சாரம் பண்பாடுகொண்ட கொரிய இனத்தவர்கள் 65 வருடங்களுக்கு முன்னர் இரு நாடுகளாகப் பிரிவு கண்டனர். சீன சார்பு நாடுகளுடன் வடகொரியா ஒரு கம்யூனிச நாடாக மலர்ந்தது. தென் கொரியாவோ அமெரிக்க தோழமை நாடுகளுடன் சேர்ந்து ஒரு முதலாளித்துவ நாடாக உருவெடுத்தது. வடகொரியா பொருளாதார வளம் குன்றினாலும் கணனி, தொழில்நுட்ப, அணுஉற்பத்தியில் மிகப்பெரிய வளர்ச்சி கண்டதால் அமெரிக்காவுக்கும் அதன் அணிசார்ந்த நாடுகளுக்கும் பெரும் அச்சுறுத்தலாகவே இருந்து வருகின்றது. கடுகு சிறிதானாலும் காரம் பெரிதுதான். தற்போது வடகொரியா - தென்கொரியா பகை நிறைவுக்கு வந்திருப்பதை உலகம் சந்தோஷமாக வரவேற்றிருக்கிறது. பரம எதிரிகளாக இருந்த இருநாட்டுத் தலைவர்களும் கடந்த 27.04.2018 அன்று சந்தித்து சமாதான உடன்படிக்கைக்கு வந்திருக்கிறார்கள். இந்த நிலையில் இருநாட்டு இராணுவ, ஆளணிப்பலத்தையும் சுருக்கமாகப் பார்ப்போம்...

| | வடகொரியா - | தென்கொரியா |
|---|---|---|
| -நாட்டுத்தலைவர் | Kim Jong Un | Moon Jae In |
| -சனத்தொகை | 25.3 மில்லியன் | 51.2 மில்லியன் |
| -ஒருவரின் வருடாந்த வருமானம் | 1.700 US$ | 39.400 US$ |
| -ஆயுட்காலம் | 71 வயது | 83 வயது |
| -2018 பாதுகாப்புச் செலவு | 7.5 பில்லியன்US$ | 40 பில்லியன்US$ |

### படைப்பலம்

| | | |
|---|---|---|
| -படையினர் எண்ணிக்கை | 10.20.000 பேர் | 4.95.000 பேர் |
| -கப்பல்படையினர் | 60.000 | 70.000 |
| -விமானப்படையினர் | 1.11.000 | 65.000 |
| -பாதுகாப்பு உதவிப்படையினர் | 1.89.000 | 4.500 |
| -பயிற்சியிலுள்ளஉதவிப்படையினர் | 57.00.000 | 45.00.000 |
| -யுத்ததாங்கிகள் | 3.500 | 2.434 |
| -போர் விமானங்கள் | 545 | 567 |
| -நீர்மூழ்கிக்கப்பல்கள் | 73 | 23 |
| -ஆட்டிலறிகள் | 21.100 | 11.000 |

எது எப்படியானாலும் யுத்தமில்லாத பூமி, மனித அழிவுகள் இல்லாத உலகம் வேண்டும் என்றே இன்றைய உலகம் கருதுகின்றது. ஆகவே இந்த இருநாடுகளின் சமாதானம் மலர்வதை வரவேற்போம்!...

# நாட்டு நிலவரம்.......

(கலைவாணி.ஏகானந்தராஜா)

மீண்டும் ஊருக்கு பயணம். வளர்ப்புத் தாயிடமிருந்து சொந்தத் தாயிடம் செல்வதென்றால் யாருக்குத்தான் கசக்கும். வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பின் ஆண்டுக்கொருமுறை இந்தக் கொடுமையான குளிருக்குப் பயந்து ஒளிந்துகொள்ளவே இந்த பயணம். மார்கழி தை மாசி மாதங்கள் அங்கு எமக்கு ஏற்ற காலநிலை. அங்கு எம் உறவுகளோ பனி குளிர் விறைக்கிறது நடுங்குகிறது என்று சொல்லி குளிருக்குப் பாதுகாப்பான கம்பளி உடைகள் அணிந்து காதுகளை மூடிக்கட்டி திரிவார்கள். சயிக்கிள் மோட்டார்சயிக்கிள் பாவிப்பவர்கள் லெதர் ஜக்கட்டுகளும் கையுறைகளும் அணிந்து கொள்வார்கள். பார்க்க சிரிப்பாக இருக்கும். இத்தனைக்கும் காலநிலை 23 24 பாகை வெப்பநிலையே.

விமானநிலையத்திலிருந்து யாழ் போக குறைந்தது எட்டு மணிநேரம் எடுக்கும். (400 கிலோ மீற்றர்) அனுராதபுரம் வரை வேகக்கட்டுப்பாடு இருந்தாலும் பொலிஸ் வேட்டை மிகக்குறைவு ஓமந்தை வவுனியா கிளிநொச்சி ஆனையிறவு சாவகச்சேரிவரை பொலிஸ் கெடுபிடி சொல்லிமாளாது. ஒவ்வொரு மைலுக்கும் வசூலுக்காக காத்திருப்பார்கள். இத்தனை கெடுபிடிகளையும் தாண்டிய ஓட்டத்தில் தான் தினம் தினம் விபத்துக்கள் நடந்துகொண்டிருக்கின்றன. அங்கு தற்போதெல்லாம் 100 மோட்டார் சைக்கிளைப் பார்த்தால் 10 சைக்கிள்களைக் காணலாம். வெளிநாட்டவர் மோட்டார் சைக்கிள் கார் வாகனங்கள் ஓடுவதற்கு கொழும்பிலேயே தற்காலிக ஓட்டுனர் பத்திரம் பெறவேண்டும். அதுவும் ஒரு மாதத்துக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும். அதற்கான கட்டணம் 1000 ரூபா. கையூட்டு 800 ரூபா. இந்த பிரத்தியேக உழைப்புக்காகத்தான் வேறு மாகாணங்களில் இந்த வசதியை ஏற்படுத்திக் கொடுக்காது கொழும்பில் மட்டும் வைத்துள்ளார்கள் போலும்.

யாழ்ப்பாணத்தில் பொலிசாருக்கு நல்ல உழைப்பு. ஒரு வாகனத்தை நிறுத்தி வைத்து பல கேள்விகளை கேட்பார்கள். எனக்கு சப்போட் பண்ணு என்று கேட்பார்கள். எம்மவர்கள் உடனே கையில் காசைத் திணித்துவிட்டு சென்றுவிடுவார்கள். மடியில் கனமிருந்தால் தானே வழியில் பயமிருக்கும். மடியில் கனமிருக்கோ இல்லையோ விட்டால்போதும் என்று பணத்தை வாரி இறைக்கிறார்கள். (எல்லாம் வெளிநாட்டு பணம் செய்யும் வேலை). நாம் யாழ்ப்பாணம் சென்றதும் சந்தைக்குப் பக்கத்து கடைகளுக்கு செல்ல ஒரு சயிக்கிள் வேண்டும்

என கேட்டோம். பக்கத்தில் யார் வீட்டிலும் சயிக்கிள் இல்லை.வீட்டுக்கு குறைந்தது இரண்டு மூன்று மோட்டார் சயிக்கிள் நிற்கிறன. நூறு மீற்றர் தூரம் போகவும் மோட்டார் சயிக்கிள் தான் பாவிக்கிறார்கள். கோண்டாவிலிலிருந்து நல்லூர் செல்ல சயிக்கிள் கிடைக்காதமையால் ஓட்டோ பிடித்துச்சென்றோம். போக வர 400 ரூபா. ( 2 யூரோதான்) ஆனாலும் எம் தேவைக்காக ஒரு பாவித்த சயிக்கிளை 6 ஆயிரம் ரூபாவுக்கு வாங்கினோம். (புதிய சயிக்கிள் விலை 15 இலிருந்து 17 ஆயிரம்)

எங்கள் கதை இப்படியிருக்க, சென்ற வருடம் போனபோது எம் அண்ணன் மகன் படிப்பில் குறைவான புள்ளிகள் எடுத்திருந்தான். பாடசாலைக்கு 3 கிலோமீற்றர் நடந்துதான் செல்வான். ஆகவே 70 புள்ளிகளுக்கு மேல் எடுத்தால் புதிய சயிக்கிள் வாங்கித்தருவதாக வாக்களித்திருந்தோம். இந்த ஆண்டில் எல்லாப்பாடமும் 70 க்கு மேல் புள்ளிகள் எடுத்திருந்ததால் 17 ஆயிரம் ரூபாவுக்கு ஒரு சயிக்கிள் வாங்கி கொடுத்தோம். அவன் முகமே மாறிவிட்டது . இது வேண்டாம் பாசாலையில் எல்லோரும் மௌன்றின் பைக் ( mouten byck) தான் வைத்திருக்கிறார்கள் என்றான். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. தற்போது நாட்டில் மக்களின் வசதிகள் கூடி அதற்கேற்ப மனநிலை மாற்றமும் வாழ்வுநிலை மாற்றமும் தான் எமக்கு ஆச்சர்யத்தை தந்தது.

எனக்கு காலநிலை மாற்றத்தால் வயிற்றுப்போக்கு கண்டிருந்தது. அதனை கட்டுப்படுத்த மல்லிக்கோப்பி தரும்படி கேட்டேன். ஒருவரை ஒருவர் பார்த்தார்கள். பக்கத்து வீடெல்லாம் கேட்டனுப்பினார்கள். இல்லை என்று பதில் வந்திருந்தால் பறவாயில்லை மல்லிக்கோப்பி ஒருவீட்டிலும் இல்லையாம் நெஸ்கபே (Nescaffee) தான் இருக்கிறது என்றார்கள். இந்தப் பதிலைக்கேட்டு நான் விறைத்துவிட்டேன் ...பனியில் அல்ல ...அவர்களது பதிலில். இதுபோலவே வெள்ளிக்கிழமை விரதத்திற்கு ஊறுகாய் வடகம் தயிர் சேர்த்து சாப்பிட ஆசையாக இருந்தது. தயிரா? திருநெல்வேலியில் ஒரு பால் பண்ணை இருக்கு அங்குதான் போகவேண்டும் என்றார்கள். ஊறுகாய் அந்த வட்டாரத்திலேயே ஒரு வீட்டிலும் இல்லை. பிறகு வடகம் வத்தல் பற்றிக் கேட்க வேண்டுமா? இது இப்படி இருக்க யாழ்ப்பாணத்தில் முருங்கைக்காய் விலை 800 ரூபா. ( வெளிநாடுகளில் மலிவாக வாங்கலாம். ) வீட்டுக்கு வீடு வேலிகளெங்கும் காணப்பட்ட முருங்கை மரங்கள் எங்கே? முருங்கை மரங்கள் இல்லாதமையால் தானே இந்த விலையேற்றம். ஏன் வளவுகளில் முருங்கை நடவில்லை என்று கேட்டேன். வீட்டில் முருங்கை நின்றால் முடக்குவாதம் வருமாம். அது மட்டுமல்ல ஒரே கம்பளிப்புளு. என்கிறார்கள். முன்னைய

காலங்களில் எல்லோருக்கும் முடக்குவாதம் வந்ததா? கம்பளிப்புளுவை ஓலை எரித்துக் கொளுத்தவில்லையா? அதுமட்டுமா? வீட்டின்முன் செரிமரம் நட்டால் நிழலாக இருக்குமே என்றேன். அது வீட்டிற்கு தரித்திரமாம். வீட்டுத்தேவைக்கு தேசி, தோடை நடலாமே என்றால் அது ஏதோ வாஸ்து இல்லையாம். எனக்கு எதுவுமே புரியவில்லை.

25 வருடங்களுக்கு மேல் நின்ற புளியமரத்தை தறித்துவிட்டார்களாம். இது வாழ விடாதாம். நாம் வாழவில்லையா? நாம் அங்கு வாழ்ந்த போது இந்த மரங்கள் செடிகள் எல்லாம் நின்றதில்லையா? இன்னம் சில விடயங்கள்....யாழ்பாணத்திலிருந்து காங்கேசந்துறை போவதற்குள் நூறுக்கு மேற்பட்ட கல்யாணமண்டபங்கள். தனிப்பட்ட ஒருவர் மட்டுமே 10 மண்டபங்கள் குறைந்தது 5க்கு மேல் வைத்திருக்கிறார்கள். அங்கு கல்யாணவீடுகளின் ஆடம்பரத்தை சொல்லத் தேவையில்லை. இந்த மண்டபங்கள் திருமணநாட்கள் இல்லாதபோது வருமானம் எப்படி என்று யோசிக்கிறீர்களா? தினம் ஒரு பிறந்தநாள், பூப்புனித நீராட்டு,பாடசாலை ஒன்றுகூடல்,நண்பர்கள் ஒன்றுகூடல் அதுமட்டுமா? ஆண்டுத்திவசம், அந்தியேட்டி எல்லாம் இப்போ மண்டபத்தில் தான். ஒரு அந்தியேட்டி அழைப்பு சென்றிருந்தேன் அங்கு பத்து மரக்கறிகளுடன் சாப்பாடு. பாயாசம் வடை..பழக்கலவை .எல்லாம் முடிந்து உச்சகட்டமாக என்னை வியப்புக்குள்ளாக்கிய விடயம் இதுதான். வாசலில் ஒருவர் வெள்ளித்தட்டம் ஒன்றை பரிசாகத்தந்து முத்தமிட்டு அனுப்பிவைத்தார். எப்போதிருந்து இந்த கலாச்சாரம் என்று வினவினேன். இப்போ எல்லாரும் இப்படித்தான் செய்கிறார்கள் என்று பதில் வந்தது. சிலவேளை அடுத்த தடவை போகும்போது மரணவீட்டிலும் பரிசுப்பொருள் கிடைக்கலாம்.

கோவில் திருவிழாவுக்கு சென்றிருந்தேன். தாகமாயிருந்தது. பழைய நினைவுகளும் முட்டிமோதி பந்தலுக்கு இழுத்துச்சென்றது. சர்பத் வேணுமா யூஸ் வேணுமா என்று கேட்டார்கள். இதை விட சில பந்தல்களில் கோப்பி தேநீரும் உண்டாம். எனக்கு மோர் குடிக்கவேண்டும் போல் இருந்தது. கேட்டால் மோர் இல்லை பியர் தரவா என்றும் கேட்கலாம். ஏனெனில் அரசாங்கம் பியரின் விலையை குறைத்து சோடா போன்ற குளிர் பானங்களின் விலையைக் கூட்டியுள்ளது. இதுமட்டுமல்ல சந்திக்கு சந்தி பியர் வைன் விற்பனை நிலையங்களுக்கு குறைவே இல்லை. இன்னும் அனுபவங்களை எழுதலாம்.....

இவை சில துளிகளே ... (அடுத்த இதழில்)

# உலகத் தமிழ்ப் பெண்கள் மாநாடு....

தமிழ்ச் சமூகத்தில் முதல் முறையாக தமிழ்ப் பெண்களே ஒன்றிணைந்து நடத்தும் பெண்கள் மாநாடு.
பெண்களே எங்கள் சமூகத்தின் கண்கள்.
அறிவும்,ஆயுதமும் தாங்கிய எங்கள் உயிர்நாடிகளின் மாநாடு.
பெண்ணடிமைச் சமூகம் அல்ல எங்கள் சமூகம் பெண் ஆளுமைகள் சமூகமே எங்கள் சமூகம்.
மே.26-2018 அனைத்து தமிழ்ப் பெண் ஆளுமைகளும் ஒன்று திரள்க.!
உலகத் தமிழ்ப் பெண்கள் மாநாடு-மே.2018.காஞ்சிபுரம்
தொடர்புக்கு.
உலகத் தமிழ்ப் பெண்கள் மாநாடு ஒருங்கிணைப்பாளர்.
918608572345 917867890890. 914448548546.

---


# அன்பின் படைப்பாளிகளே. வாசகர்களே.......

பல தேசத்து எழுத்தாளர்களின் 55 சிறுகதைகளின் தொகுப்பான முதுதமிழரின் முத்துமாலை வெற்றிகரமாக Aamazon.com யில் பதிவேற்றம் (Upload) செய்து விட்டேன். KDP மதிப்பாய்வு (in Review) செய்வதாகி விட்டது. கீழே தரப்பட்டுள்ளது லிங்க் ஐ சொடுக்கினால் பார்கலாம். உங்கள் படைப்பினை Kindle Reader கருவியிலும். கணனியிலும் (Kindle in Desk Top) யிலும் வாசிக்கலாம் . இது முதியோருக்கு சாதனை ஒத்துழைத்த அனைவருக்கும் என் நன்றி. வாசியுங்கள் பகிருங்கள்

https://kdp.amazon.com/en_US/bookshelf?publishedId=A2F4648693K3YV
You received this message because you are subscribed to the Google Groups "TamilLiteraryReaders" group.
To unsubscribe from this group and stop receiving emails from it, send an email to LliteraryTamilReaders+unsubscribe@googlegroups.com.
To post to this group, send email to LliteraryTamilReaders@googlegroups.com.
To view this discussion on the web visit https://groups.google.com/d/msgid/LliteraryTamilReaders/c45ba223-cb1b-45e3-9776-46f600ba9d0f%40googlegroups.com.
For more options, visit https://groups.google.com/d/optout.

பொன் குலேந்திரன் - மூத்த எழுத்தாளர் - கனடா
E.mail kulendiren@yahoo.com - kulendiren2509@gmail.com

2018/ மண் சஞ்சிகை / 2019, 2020







முள்ளிவாய்க்கால் நினைவலைகள்



Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

MANN
Germany / Ausgabe 189



மாமேதை கார்ல் மார்க்ஸ்
05.05.1818 - 14.03.1883



கவியரசு கண்ணதாசன்
24.01.1927 - 17.10.1981



அன்னை பூபதி
03.11.1932 - 19.04.1988



வின்னி மண்டலே
26.09.1936 - 02.04.2018


வருட சந்தா ஜேர்மனி 15€
ஏனைய நாடுகள் 20€